பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 06 சனிக்கிழமை 21.11.2020 கதிர் 16

**இனி இது இரகசியம் அல்ல!**

வெளிநாட்டில் இருந்து பழைய பத்திரிகை நண்பர் – தோஸ்து – நேற்றுப் பகல் அழைப்பு எடுத்தார்.

நான் பத்திரிகை உலகில் அவரை விட சேவையிலும் வயதிலும் சற்று மூத்தவன் என்பதால் 'அண்ணை' என்றுதான் என்னை அழைப்பார்.

"சின்ன விடயங் பக்கம் 02 ››

# நினைவேந்தலைத் தடுக்க மல்லாகம் நீதிமன்று மறுப்பு

## மாவை, சுகிர்தன் சார்பில் சுமந்திரனின் வாதம் ஏற்பு

### வழக்கை ஒத்திவைத்தது யாழ்.நீதிமன்றம்

(ந.லோகதயாளன்)



யாழ்ப்பாணம், நவம்பர் 21

மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்குமாறு கோரி தெல்லிப்பழை மற்றும் அச்சுவேலிப் பொலிஸார் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நிராகரித்தார் மல்லாகம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா.

வழக்கின் எதிராளிகளான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் வாதம் மற்றும் உத்தரவாதங்களை ஏற்று, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தார் நீதிவான்.

பக்கம் 02 ››

## கொழும்பில் மற்றுமொரு படைமுகாம் 'லொக்டவுன்'

கொழும்பு, வெல்லம்பிட்டிய – வென்னவத்த பகுதியிலுள்ள சிவில் பாதுகாப்பு படை முகாம் நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளது.

குறித்த படை முகாமில் கொரோனாத் தொற்றாளர்கள் பலர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து எதிர்வரும் 14 நாள்களுக்கு அந்த முகாம் முடக்கப்பட்டுள்ளது.

## ரூபா 100 கோடி பெறுமதிமிக்க ஹெரோயினுடன் மூவர் கைது!

மாத்தறை – வெலிகம பகுதியில் 100 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் நேற்று கைப் பக்கம் 02 ››

## வழக்கில் முன்னிலையாகினர் என்பதற்காக சட்டத்தரணிகள் மீதும் வழக்குப் போடுவதா?

### பொலிஸார் மீது யாழ். நீதிமன்றில் சுமந்திரன் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், நவ. 21

"பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முன்னிலையான நீதித் துறை சார்ந்த சட்டத்தரணிகளுக்கு எதிராக கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இது, இலங்கையில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பின்பற்றப்படாத அநாகரிகமான ஒரு செயற்பாடு. அதனால் இந்த வழக்கை குப்பைத் தொட்டியில் மன்று போடவேண்டும் அல்லது வழக்குத் தொடுனர் அதனை மீளப்பெறவேண்டும்

– இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பக்கம் 02 ››

## சிவாஜிலிங்கத்தை பாம்பு தீண்டியது



முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பாம்பு தீண்டிய நிலையில் பக்கம் 02 ››

## கொரோனா சாவு 74 நேற்றும் ஒருவர் பலி

### மூன்றாவது அலையில் மட்டும் 61 பேர் காவு

இலங்கையில் கொரோனாத் தொற்றால் நேற்றும் ஒருவர் சாவடைந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

கொழும்பு – 02 ஐச் சேர்ந்த 70 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார். பக்கம் 02 ››

## 839 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாவுக்கு இலக்கு

கொரோனா வைரஸ் தொற்று உறுதியான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 839 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 6 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதையடுத்து கொரோனாத் தொற்றுக்குள்ளான பக்கம் 02 ››

## கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மத்திய வங்கி ஆளுநர் தனிமையில்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ டி.லக்ஸ்மன் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்குத் தேநீர் பரிமாறிய ஊழியர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 19 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

### நேற்றும் 435 பேருக்குக் கொரோனா உறுதி

இலங்கையில் நேற்றும் 435 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பேலியகொடை கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பக்கம் 02 ››

## 200 ஊடகவியலாளர்களை கைதுசெய்ய அரசு திட்டம்!

### நாடாளுமன்றில் சஜித் அணி பகீர் தகவல்

ராஜபக்ஷ அரசை விமர்சனம் செய்யும் 200 ஊடகவியலாளர்களைக் கைது செய்யும் திட்டம் இலங்கைப் பொலிஸாரிடம் உள்ளது. பக்கம் 02 ››

## மாவீரர்களை நாடாளுமன்றில் நினைவு கூர்ந்தார் சாணக்கியன்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் நேற்று மாவீரர்களை நினைவு கூர்ந்துள்ளார். வரவு – செலவுத் திட்டத்தின் மீது நேற்று உரையாற்றத் தொடங்கியபோது எமது இனத்துக்காக உயிர் நீத்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறார் என சபையில் அவர் தெரிவித்தார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களை வைத்துக் கொண்டு ஊதிப் பெருப்பிக்கும் உங்கள் கைவண்ணம் தொடர்பில் எங்களுக்குள் நாங்கள் பேசுவதுண்டு" – என்று என் பத்திரிகை வட்டார நண்பர் குழாம் பற்றிய பழைய நினைவுகளுடன் விடயத்தை எடுத்தார் அவர்.

*"அப்படி என்ன, என்னைப் பற்றிப் பேசுவார்கள்?"* – என்றேன் நான்.

*"கோவிக்காதையுங்கோ. நேரடியாகவே சொல்லுகிறேன்."* – என்று பீடிகை போட்டார்.

*"உங்களுக்கு ஈர் கிடைச்சால் போதும் ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி விடுவீர்கள்...!"* – என்று என்னைச் சீண்டினார் நண்பர்.

*"அப்படியா? நல்ல சேர்டிபிக்கேட்"* – என்றேன் நான்.

*"உந்தக் கதை எதற்கு இப்போது?"* – என்றும் கேட்டேன்.

*"இல்லை அண்ணை. புலிகள் காலத்து எங்கள் செய்தி தேடல் நினைவுக்கு வந்தது. புலிகளுக்கும் அரசுக்கும் பேச்சுக்கான சூழல் அரும்பத் தொடங்கினால் நீங்கள் தான் செய்தி ராஜா. மாறி மாறி எக்ஸ்குளூசிவ் அடிப்பீர்கள். பேச்சுத் தொடங்க முதலே பேச்சுக் குறித்து சிங்காரம் பண்ணி செய்தி போடத் தொடங்கி விடுவியள். அப்ப நீங்கள் சொன்ன ஒரு தகவல் எனக்கு இப்பவும் நினைவிலை நிற்குது... 'தம்பி பேச்சுக்கு முதல் பேச்சுக்கான பேச்சு என்று சில விடயங்கள் நடக்கும். அதை வைச்சே சில காலத்துக்கு செய்தி ஓட்டி விடலாம். எங்கை பேசுறது, யார் பேசுறது, யாருடன் பேசுறது, எப்படி பேசுறது அதற்கான ஏற்பாடுகள் என்ன என்றெல்லாம் விடயம் இருக்கும்.' – எண்டு நீங்கள் சொன்னதை பிறகு பேச்சுக் காலத்திலை மாறி மாறி செய்தியாகப் பார்த்திருக்கிறம். இரண்டு தரப்பும் பேசப் போகினம் எண்டதை வைச்சே நாளுக்கொரு எக்ஸ்குளூசிவ் சோடிப்பியள்"* – என்று எனது பழைய வண்டவாளத்தை அவிழ்க்கத் தொடங்கினார் என் பழைய தோஸ்து.

நான் அவரை வழி மறித்தேன்.

*"இப்ப... ஏன் உந்தக் கதை?"* – என்று கேட்டேன்.

*"ஏனோ...? அதைத்தானை திரும்பவும் அடுத்த ரவுண்ட் தொடங்கியிருக்கின்றியள்... அப்ப... சந்திரிகா – புலிகள் பேச்சு எண்டோ, மஹிந்தர் – புலிகள் பேச்சு எண்டோ அந்தப் பேச்சுகள் ஆரம்பமாவதற்கு முன்னரே பல ரவுண்ட் வீட் செய்தி முந்தி அடிப்பியள்... இப்ப ராஜபக்ஷக்கள் – கூட்டமைப்பு என்று தொடங்கியிருக்கின்றீர்கள். அந்தப் பேச்சுத் தொடங்க முன்னரே பழைய பல்லவிப் படி 'பேச்சுக்கான பேச்சு' எண்டு நேற்று விசயத்தை அவிழ்த்து விட்டிருக்கியள்... ஈர் கிடைச்சப் போட்டுது போல. அதைப் பேனாக்கி, பெருமாளாகவும் மாற்றி விட்டியள்... இனி என்ன? பேச்சுத் தொடங்க முன்னரே அதைப் பற்றி சீவிச் சிங்காரிச்சு பல ரவுண்ட் செய்தி அடிப்பியள்...!"* – எண்டு விளாசினார் என் நண்பர்.

போற போக்கில ஏன் தொழில் இரகசியத்தையே அம்பலமாக்கி விடுவார் போல இருந்தது. மெல்ல தொலைபேசி பேச்சை 'கட்' பண்ணி, அழைப்பை முடிவுக்குக் கொண்டு வந்தேன்.

அந்த நண்பர் சொன்னபடி ஒரு காலத்தில – புலிகளின் காலத்தில – *'பேச்சுக்கான பேச்சு'* என்பது முக்கிய விடயமாக இருந்தது.

அது மாத்திரமல்ல, அத்தகைய *'பேச்சுக்கான பேச்சுகளில்'* என் போன்ற பத்திரிகையாளர்களின் பங்கு பணி கூட மிகச் சிலாகிக்கத்தக்கதாக இருந்தது. காலம் வரும் போது அது பற்றி மனம் திறப்பேன்.

எதிரெதிர்த் தரப்புகளை – எதிரித் தரப்புகளை – பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு பூர்வாங்க முயற்சி – எத்தனம் – முக்கியம். இரண்டு தரப்புகளுக்கும் இடையில் நம்பிக்கையாக பழகும் தரப்புகளினால்தான் அது முடியும்.

பேச்சுத் தீ பற்றுவதற்கான முதல் நெருப்புக்குச்சாக என் போன்றவர்கள் பங்காற்றியமை என் பழைய நண்பருக்கு நன்கு தெரியும். அதைத்தான் அவர் *'பேச்சுக்கான பேச்சு'* என்று நினைவூட்டினார் போலும்.

★ ★ ★

நேற்று சூரசம்ஹாரத்தின் இடையே சில கோவில்களில் நரகாசுரனுக்கும் முகக்கவசம் அணிவித்திருந்தார்கள். அதிலும் பூடகமாக ஒரு செய்தி இருப்பதாக எனக்குத் தோன்றியது. அதனால் அந்தப் படங்களையும் இணைத்துள்ளேன். பாருங்கள்...!

– மின்னல் –







## சிவாஜிலிங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறை – மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு வல்வெட்டித்துறை நகர சபைக்கு அருகாமையில் உள்ள அவரது அலுவலகத்திலிருந்து வீடு செல்வதற்காக அலுவலகத்தின் கதவை மூடியபோது அதிலிருந்த பாம்பு ஒன்று கையில் தீண்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் உடனடியாக அவர் சேர்க்கப்பட்டார். அங்கு மருத்துவ பரிசோதனையின் பின்னர் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

## 200 ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சபையில் நேற்று தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷ அரசு ஊடகவியலாளர்களை இலக்கு வைக்கின்றது. அதற்கமைய தம்மை விமர்சிப்பவர்களின் பட்டியலொன்றைப் பொலிஸாரிடம் அரசு வழங்கியுள்ளது. அவர்களைக் கைதுசெய்வதற்கான உத்தரவையும் அரசு வழங்கியுள்ளது. இந்தத் தகவல் எனக்குக் கிடைத்துள்ளது.

இளம் தலைவராகவிருந்த வேளை மஹிந்த ராஜபக்ஷ, மனித உரிமைகளுக்காகப் போராடி ஜெனிவா வரை சென்றவர். இதன் காரணமாக மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு அதற்கு எதிரான வழியில் பயணிப்பது நல்லதல்ல. அவ்வாறான அரசொன்றை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இது கடந்த காலத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## 19 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 276 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 13 ஆயிரத்து 271 பேர் குணமடைந்துள்ளனர். 5 ஆயிரத்து 931 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 74 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நினைவேந்தலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை இதேபோன்ற தடை உத்தரவு கோரும் யாழ் பொலிஸாரின் விண்ணப்பம் தொடர்பில் தனது முடிவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்தி வைத்துள்ளது.

மாவீரர் தின நினைவேந்தலுக்கு எதிராக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மூதூர், மட்டக்களப்பு நீதிமன்றங்களில் அந்தந்தப் பகுதி பொலிஸார் ஒருதலைப்பட்சமாக தடை உத்தரவுகளைப் பெற்றிருக்கையில், யாழ்ப்பாணம், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றங்களில் பிரதிவாதிகளின் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாகி வாதிட்டமையால் பொலிஸாரின் முயற்சிகள் அங்கு பிசுபிசுத்துப் போயின.

மல்லாகம் நீதிமன்றத்தில் தனது கட்சிக்காரர்களான மாவை சேனாதிராசா, சுகிர்தன் ஆகியோர் தொடர்பில் பின்வரும் உத்தரவாதங்களை சுமந்திரன் வழங்கினார்.

★இலங்கை குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 106ஆம் பிரிவின் கீழான பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் எதிராளிகள் ஈடுபடமாட்டார்கள். தடை செய்யப்பட்ட இயக்கங்களின் சின்னங்கள், கொடிகள், இலச்சினைகளைப் பயன்படுத்த மாட்டார்கள்.

★தனிமைப்படுத்தல் சட்ட விதிகள், ஏற்பாடுகளை மீற மாட்டார்கள், சுகாதார அதிகாரிகளின் விதிமுறைப்படி நடப்பார்கள்.

★தமது நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள், விவரங்களை சுகாதார அதிகாரிகளுக்கு முற்கூட்டியே அறிவித்து அவர்களின் வழிகாட்டல்கள், கண்காணிப்புக்கு அமையவே அவற்றை நடத்துவர்.

– இந்த உத்தரவாதங்களினால் திருப்தியடைந்த மன்று, இந்த விடயங்களை எதிராளிகள் தரப்பு மீறினால் பொலிஸார் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்றும், நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடுக்கலாம் என்றும் சுட்டிக்காட்டியது.

முன்னதாக இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் எடுக்கப்பட்டு நேற்று பிற்பகலுக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை இதேபோன்ற ஒரு வழக்குக்காக வடக்கு மாகாண மேல் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் அவரது குழுவினரும் நேற்றுப் பிற்பகல் மல்லாகம் நீதிவான் நீதிமன்றிலும், நேற்று மாலை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திலும் மாறி மாறி விரைந்து சென்று சட்ட வாதத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் சட்டத்தரணிகள் கேசவன் சயந்தன், வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உட்பட பலர் இந்த வழக்குகளில் முன்னிலையாகினர். (உ)

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடுமையான இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த நபர், கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.

இதையடுத்துக் கொரோனாவால் நாட்டில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 74 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலையில் சிக்கி இதுவரை 61 பேர் சாவடைந்துள்ளனர். கடந்த 28 நாள்களில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## 839 பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட படை அதிகாரிகளின் எண்ணிக்கை 839 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களுள் 635 பொலிஸ் அதிகாரிகளும், 204 பொலிஸ் விசேட படை அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரூபா 100 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பற்றப்பட்டுள்ளன. அத்துடன், மூன்று சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 100 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடி படையினரே சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இந்தப் போதைப்பொருள்களை மீட்டுள்ளமையுடன், சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

## வழக்கில் முன்னிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடும் ஆட்சேபனையை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயத்திக்கத்துக்குள், நவம்பர் 21ஆம் திகதி (இன்று) தொடக்கம் 29ஆம் திகதிக்கு இடையே இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லை என்ற வியாக்கியனத்தின் கீழ் இந்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களில் நினைவேந்தலை நடத்தவுதற்கு தடை கேட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், க.சுகாஷ், கே.சயந்தன், மாநகர சபை உறுப்பினர்கள் வரதாசா பார்த்திபன், மயூரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக தடைக் கட்டளை வழங்குமாறும் இந்த விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதில் 4ஆவது பிரதிவாதியான தன் சார்பில் முன்னிலையாகி முன்வைத்த ஆட்சேபனையின் போதே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு மன்றுரைத்தார்.

பொலிஸார் இந்த மனுவில் என்னையும் ஏனைய சட்டத்தரணிகளையும் குற்றச்செயலில் ஈடுபடவுள்ளனர் என்று குறிப்பிட்டு பிரதிவாதிகளாக இணைத்துள்ளனர். பொலிஸார் குறிப்பிட்டுள்ள நீதித்துறை சார்ந்த பலர் இன்றைய தினம் மேல் நீதிமன்றில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முன்னிலையாகியவர்கள். பொலிஸார் இப்படி நடந்துகொண்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சட்டத்தரணிகள் எவ்வாறு நீதிமன்றில் முன்னிலையாவார்கள்.

நான் மூத்த சட்டத்தரணியாகவும் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக ஜனாதிபதி சட்டத்தரணியாகவும் உள்ளேன். நான் குற்றச்செயலில் ஈடுபடுவேன் என்று பொலிஸாரால் இந்த மன்றுக்கு எவ்வாறு விண்ணப்பம் செய்ய முடியும்? யாராவது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சிக் கூண்டில் ஏறி நான் குற்றம் செய்யப் போகின்றேன், சமாதானத்துடன் வாழும் மக்களிடம் குழப்பத்தை தூண்டிவிடப் போகின்றேன் என்று சாட்சியமளிக்க முடியுமா? அந்தத் திராணி யாருக்காவது இருக்கின்றதா? பொலிஸ் சீருடை அணிந்து வந்து எங்களை முட்டாள்கள் ஆக்காதீர்கள்.

எனவே இலங்கையில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பின்பற்றப்படாத அநாகரிகமான முறையில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முன்னிலையான நீதித்துறை சார்ந்த சட்டத்தரணிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை பொலிஸார் மீளப்பெறவேண்டும் அல்லது மன்று குப்பைத் தொட்டிக்குள் போட வேண்டும்.

நாம் கொவிட் -19 நோய் பரவலுக்கு ஏதுவாக சட்ட திட்டங்களை மீறப்போகின்றோம் என்று பொலிஸார் விண்ணப்பம் செய்கின்றனர். யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அண்மையில் அமைச்சர்கள் வருகை தந்து ஒரு மண்டபத்துக்குள் 250 பேருக்கு மேல் அமர்ந்திருந்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்கள் பொலிஸாரின் கண்களுக்குத் தெரியவில்லை. அந்தக் கூட்டங்களுக்கு நானும் சென்றிருந்தேன். தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிவிட்டேன் என்று என்னை இன்று வரை பொலிஸார் கைது செய்யவில்லை – என்று ஜனாதிபதி சட்டத்தரணி மன்றுரைத்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பு பெரும்பாலும் திங்கட்கிழமை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மன்னாரில் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக திங்கள் மேன்முறையீடு

மன்னாரில் மாவீரர் நினவேந்தலுக்கு விதிக்கப்பட்ட நீதிமன்றத் தடைக்கு எதிராக திங்கள் மேன்முறையீடு செய்யப்படும்.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து மரணித்த வீர மறவர்களுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு எதிர் வரும் 27 ஆம் திகதி இடம்பெற இருந்த இந்த சூழ் நிலையில், நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கடந்த 6 ஆண்டுகளாக யுத்தத்திற்கு பின்னர் மிகவும் சிறப்பாக மாவீரர் தின நிகழ்வு நவம்பர் 27 ஆம் திகதி இடம் பெற்று வந்தது.

மாவீரர்களின் உறவுகள் உணர்வு பூர்வமாக தமது பிள்ளைகளுக்காக அஞ்சலி செலுத்துகின்ற ஒரு நிகழ்வாக அவர்களின் ஆத்மார்த்தமான கண்ணீரை சிந்துவதற்கான ஒரு நாளாக நவம்பர் 27 இருந்து வந்தது.

பல ஆயிரக்கணக்கான வீரர்கள் இலட்சியத்திற்காக மடிந்த இந்த தேசத்தில் அவர்களுடைய கல்லறைகள் மீது கண்ணீர் விடுவதற்கு கூட இந்த அரசாங்கம் தடை விதித்து ஒரு மோசமான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

நிலைமாறுகல நீதிக்கு பின் மாறலி கொள்கை தத்துவத்தின் பிரகாரம் நினைவேந்தல் நிகழ்வுகள் நடாத்தப்பட வேண்டும் என்கின்ற சர்வதேச நியம முறைகளுக்கு அப்பால் இவ்வருடம் நீதிமன்றங்கள் ஊடாகத் தடை பெற்றுள்ளது.

பொலிஸார் நீதிமன்றத்தை தவறான முறையிலே தொடர்ச்சியாகவே உபயோகித்து வருகின்றனர்.

மாவீரர் தினத்துடன் சம்பந்தம் இல்லாதவர்களுக்கு



எல்லாம் தடை உத்தரவு பெற்றிருக்கின்றார்கள். கோயிலில் கஞ்சி காய்ச்ச ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ள நிலையில், அருட்தந்தை ஒருவர் உற்பட ஐவருக்கு மன்னார் நீதிமன்றம் தடை உத்தரவிட்டுள்ளது.

என்னைத் தவிர ஏனைய நான்கு பேரும் மாவீரர் தினத்துடன் சம்பந்தம் இல்லாதவர்கள். நீதிமன்றத்தின் நேரத்தையும்,நீதிமன்றத்தையும் இந்தப் பொலிஸார் தவறான வழிகட்டுதல் செய்கின்றனர்.

அவர்களின் புலனாய்வுத்துறை ஆளுமை இல்லாதவர்களாகவும்,உண்மையை கண்டு பிடிக்க முடியாதவர்களாகவும்உள்ளனர்.இத்தகையஅரசபுலனாய்வுத்துறை இயங்குகின்ற காரணத்தினால் தான் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கும் நீதியும் குற்றத்தை கண்டு பிடிக்கின்ற தன்மைகளும் குறைவாக காணப்படுகின்றது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்விற்கும் இவ்வாறு தான் சம்பந்தம் இல்லாதவர்களுக்கு தடை உத்தரவு வழங்கினார்கள்.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட கிராம அலுவலகர் மரணத்தினுடைய உண்மைத்தன்மையைக் கூட வெளிப்படுத்த பொலிஸார் திராணியற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

பொலிஸாரின் செயல்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். நல்லெண்ணத்தை ஏற்படுத்துகின்ற விடயத்திற்கு மாறாக இனங்களுக்கு இடையில் குரோதத்தையும், முரண்பாட்டையும் ஏற்படுத்தவதற்கு வழி வகுப்பதற்கு பொலிஸார் இவ்வாறான விடயங்களில் ஈடுபடுகின்றார்கள்.

தமிழ் மக்களின் உணர்வோடு சம்பந்தப்பட்ட விடயம். இலட்சியத்திற்காக விடுதலை நோக்கோடு உயிர் நீத்த மாவீரர்களின் நினைவு நிகழ்வை தடுப்பது என்பது தொடர்ச்சியாக வடக்கு – கிழக்கிற்கு மாறான ஒரு நிலைப்பாட்டில் தெற்கினுடைய பௌத்த தேசிய வாதத்தை நிலைநாட்டுவதற்கும், பௌத்த தேசியவாத வாக்கை தன்னகர்த்தி நிரந்தரமாக்கிக் கொள்ளும் நோக்குடனும் முன்னெடுக்கப்படுவது.

ஒவ்வொறு மனங்களுக்குள்ளேயும் தமிழர்களின் எண்ணப் பிரதிபலிப்பாக இருக்கக் கூடிய மாவீரர்கள் என்கின்ற இலட்சியக் கனவும் எண்ணமும் ஒரு போதும் பௌத்த தேசிய வாதத்தினூடாக அகற்றி விடவோ அல்லது ஒழித்து விடவோ முடியாதவை என்பதனை தெற்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

காலங்கள் போகலாம். சந்தர்ப்பங்கள் மாறலாம். ஆனால் தமிழர்களின் தாகமும்,தமிழர்களின் விவேகமும், தமிழர்களின் எண்ணமும் ஒரு போதும் மாறாது. மாறவும் முடியாது. எதிர் வரும் காலங்களில் இவ்வாறான நிலமைகள் தேற்றம் பெறும்.

தடைக்கு எதிராக எதிர் வரும் திங்கட்கிழமை 23 ஆம் திகதி மேன் முறையீடு செய்ய இருக்கின்றோம். அந்த மேன் முறையீட்டின் ஊடாக தடையை நீக்கி 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை நடத்த அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

தவறாக வழி காட்டுகின்ற பொலிஸாருக்கு எமது கண்டனத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அரசு தமிழ் மக்களின் உணர்வுகளுடன் விளையாடக்கூடாது.

விளையாடினால் தமிழ் மக்கள் விபரீதமான நிலைக்கு போக வேண்டிய சூழ்நிலைக்கு இந்த அரசு தள்ளுகின்றது என்பதனை கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.– என அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய மெனிக் சந்தை பேலியகொடவில் திறப்பு!

பேலியகொடையில் அமைக்கப்பட்டுள்ள புதிய மெனிங் சந்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

புதிய மெனிங் சந்தையில் ஆயிரத்து 192 வர்த்தக நிலையங்களும் ஒரு வாகன தரிப்பிடமும் ஊழியர்களுக்கான ஓய்வறைகள், மருத்துவ வசதிகள், வங்கிகள், உணவகங்கள், குளிர் அறைகள் மற்றும் ஹோட்டல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வாகன தரப்பிடமானது சுமார் 600 வாகனங்களை நிறுத்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு மாடி கொண்ட மெனிங் சந்தையின் மூன்றாவது மாடிவரை வாகனங்களைக் கொண்டு செல்லுக்கூடிய வளாகமும் அமைக்கப்பட்டுள்ளது.


புறக்கோட்டையில் 2 ஏக்கர் நிலப்பரப்பில் வரையறுக்கப்பட்டிருந்த மெனிங் சந்தையானது தற்போது பேலியகொடையில் 13.5 ஏக்கர் விசாலமான நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணத்திற்கான மொத்த செலவு 6.9 பில்லியன் ரூபாய் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## புதிய அரசமைப்பு மாற்றம் தொடர்பாக சமூக மட்டப் பரிந்துரை அறிக்கையிடல்!

### யாழ்.சமூகசெயற்பாட்டு மையத்தில் நடந்தது கூட்டம்





இலங்கை அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய அரசமைப்பு மாற்றத்தில் உணவு உரிமை தொடர்பாகவும் பொருளாதார, சமூக மற்றும் கலாசர உரிமைகள் தொடர்பாகவும் சமூக மட்ட அமைப்புகளின் பரிந்துரைகளை அறிக்கைப் படுத்துவதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உணவைப் பிரதானமாக கொண்ட தகவல் மற்றும் நடவடிக்கைகளுக்கான இலங்கை வலையமைப்பின் ஒழுங்கமைப்பில் இந்தக் கூட்டம் யாழ் சமூக செயற்பாட்டு மையத்தில் நடைபெற்றத்துடன் நிகழ்நிலையில் வடமாகாணத்தைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புகளும் பங்கெடுத்தன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் பங்கெடுத்த அமைப்புக்கள் யாழ் சமூக செயற்பாட்டு மையம், இயற்க்கை வழி இயக்கம், மானுடம், பெண்கள் மேம்பாட்டு மையம், சட்டம் மற்றும் மனித உரிமைகள் மையம் ஆகியனவும் –

மன்னார் மாவட்டத்தில் மன்னார் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைப்பு, சமூக பொருளாதார மேம்பாட்டு அமைப்பு, ஈடுபாடு மற்றும் முயற்சிக்கான மக்கள் அமைப்பு ஆகியனவும் –

வவுனியா மாவட்டத்தில் கிராம பெண்கள் அமைப்பு, ஊனமுற்றோருக்கு மறுவாழ்வுக்கான அமைப்பு ஆகியனவும் –

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறகுகள், பெண்கள் சமூக வலையமைப்பு ஆகியனவும் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் இளைஞர் கூட்டாண்மை மற்றும் கூட்டுறவு வலுப்படுத்துதல், முல்லைத்தீவு அரசசார்பற்ற அமைப்புகளின் இணையம் ஆகியனவும் பங்குகொண்டன.



கந்தசஷ்டி நிறைவுத் துதி

**சேவடி தொழுது நின்றால் தெரிசனம் தருவான் கந்தன்!**

வேலினைக் கையில் ஏந்தி
வெற்றியைத் தந்த கந்தன்
மூலமாய் நின்ற மூர்த்தி
பொறியிலே வந்த கந்தன்
கார்த்திகைப் பெண்கள் ஏந்த
கந்தனாய் ஆன தெய்வம்
கலியுகம் காக்க என்றும்
கருணையாய் நிற்கும் தெய்வம்!

ஆணவம் அழித்த கந்தன்
அகவிருள் அகற்றும் கந்தன்
பேணிடும் அடியார்க் கெல்லாம்
பேரருள் ஈயும் கந்தன்
நாமெலாம் விரும்பி நிற்கும்
நல்லையில் உறையும் கந்தன்
சேவடி தொழுது நின்றால்
தெரிசனம் தருவான் கந்தன்!

சூரரை வதைத்த கந்தன்
சூழ்ச்சியை அறுக்கும் கந்தன்
மாயிருள் மாயை போக
வந்தனன் ஒளியாய்க் கந்தன்
ஆழமாம் பிறவி நோயை
அகற்றிட மருந்தாய் நிற்கும்
வேலுடை கந்தன் பாதம்
பற்றுவார் வீடு காண்பார்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதியின் மீது நம்பிக்கை

*"சட்டம் ஓர் இருட்டறை. அதில் வக்கீல்களின் வாதம் ஒரு விளக்கு. ஆனால் அது ஏழைக்கு எட்டாத விளக்கு."* – என்றார் அறிஞர் அண்ணாத்துரை. இந்தக் கூற்று ஈழத் தமிழினத்துக்கும் இன்று பொருந்தக் கூடியது.

சிங்களம், இரும்புச் சட்டகமாக விதித்த முறையற்ற சட்டங்களுக்குள் சிக்குண்டு கிடக்கின்றது ஈழத் தமிழினம். அந்த இருட்டறைக்குள் இருந்து தமிழர்களை மீட்கும் சட்டத்தரணிகள் இன்று சமூகத்துக்குத் தேவைப்படுகின்றார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற மிகக் கொடூரமான (Draconian) சட்டத்தையும், குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் சில பொருத்தமற்ற பிரிவுகளையும் மற்றும் தற்போதைய 'கொவிட் –19' என்ற கொரோனாத் தொற்றுப் பரம்பல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளையும் பயன்படுத்தித் தமிழர்களின் நினைவேந்தல் உரிமைகளை மறுத்து வருகின்றது தென்னிலங்கையின் சிங்கள, பௌத்த பேரினவாத ஆட்சிப் பீடம்.

யுத்தத்தில் இறந்த தம் இரத்த உறவுகளுக்காக ஒன்றுபட்டு கண்ணீர் சிந்தி அஞ்சலிக்கும் அடிப்படை உரிமை கூட மறுக்கப்பட்டு, சட்டம் என்ற இருட்டறைக்குள் சிக்கித் தவிக்கின்றது தமிழினம்.

இந்த சட்ட இருட்டறைக்குள் இருந்து தமிழினத்துக்கு மீட்புக் கிட்ட வேண்டும் என்றால் அறிஞர் அண்ணாத்துரை கூறியமை போன்று வக்கீலின் வாதம் என்ற விளக்குத் தேவைப்படுகின்றது.

அதனைத் தமிழினத்துக்குப் பெற்றுத் தரும் நன்னோக்கமாகவே தமிழ்ச் சட்டத்தரணிகள் ஒன்று சேர்ந்து *'மக்களுக்கான நீதி'* என்ற கூட்டை உருவாக்கியிருந்தனர். இன அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்கு என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்ட அந்த அமைப்பின் உதவியைத் தமிழினம் நேற்று நேரடியாகத் தரிசிக்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியது.

மாவீரர் நாளை நினைவு கூரப் பிறப்பிக்கப்படும் தடை உத்தரவை இரத்துச் செய்து, நினைவேந்தலை மேற்கொள்ள அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரும் தடையீட்டு ஆணைக்கான மனுக்களை வடக்கு மாகாண மேல்நீதிமன்றம் நேற்று விசாரித்தது.

நீதிமன்றத்தின் தீர்ப்புகள், உத்தரவுகளை விமர்சிப்பது முறையாகாது. அதனால் அவற்றை நாம் விமர்சிப்பதைத் தவிர்ப்போம்.

ஆனால், இந்த மனுக்களை விசாரித்து ஆணையிடும் நியாயாதிக்கம் தனக்கு இல்லை என்று தெரிவித்துத்தான் இந்த மனுக்களை மாகாண மேல் நீதிமன்றம் நிராகரித்துத் தீர்ப்பளித்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தின் படி, தேசியப் பாதுகாப்புத் தொடர்பான விடயம் மத்திய அரசுக்குரியது. மாகாண சபைக்குரியதன்று.

இப்படி இரத்த உறவுகள் யுத்தத்தில் கொல்லப்பட்ட தங்களின் சொந்தங்களை ஒன்று கூடி நினைவுகூர்வது என்பது தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் விடயம், இது தேசியப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட அம்சம் என்று நீதிமன்றத்தில் வந்து அரசுத் தரப்புகள் கூறியமையினால் அந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும் நியாயாதிக்கம் தனக்கு இல்லை என்று முடிவெடுத்திருக்கின்றது மாகாண மேல் நீதிமன்றம்.

அந்த முடிவு சரியா, பிழையா என்பதற்கு அப்பால், தமிழ் மக்கள் உயிரிழந்த தங்களின் உறவுகளுக்காக ஒன்றுபட்டு நினைவஞ்சல் செய்வதற்குத் தடை விதிப்பது சரி என்ற முடிவுக்கு நீதிமன்றம் வரவில்லை என்பதும் –

தனக்கு நியாயாதிக்கம் இல்லை என்பதால் அதனை விசாரிக்கவில்லை எனத் தீர்ப்பளித்தது என்பதும் – இங்கு கவனிக்க வேண்டியவையாகும்.

இதேசமயம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மூதூர், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றங்கள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கும் உத்தரவுகளை வெளியிட்டுள்ளன. இந்த நீதிமன்றங்கள் எதிலும் பிரதிவாதிகள் எவரும் முன்னிலையாகாமல் – ஒரு தலைப்பட்சமாக பொலிஸார் சமர்ப்பித்த – விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை வழங்கியிருக்கின்றன.

ஆனால் இரண்டே இரண்டு நீதிவான் நீதிமன்றங்களில் மட்டும் *'மக்களுக்கான நீதி'* சட்டத்தரணிகளின் கூட்டு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் பிரசன்னமாகி தமது வாதத்தை வைத்திருக்கின்றார்கள்.

அவற்றில் ஒன்று – மல்லாகம் நீதிமன்றம். அங்கு நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக் கோரும் தெல்லிப்பளை மற்றும் அச்சுவேலிப் பொலிஸாரின் விண்ணப்பங்களை நீதிமன்றம் நிராகரித்து விட்டது. சில நிபந்தனைகளின் அடிப்படையில் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் அனுமதியும் வழங்கியுள்ளது.

மற்றையது – யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம். அங்கும் சட்டத்தரணிகள் பிரசன்னமாகி வாதிட்டனர். அவற்றைச் செவிமடுத்த நீதிமன்றம் வழக்கை 24ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது. பொலிஸாரின் கோரிக்கை அங்கும் இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கொஞ்சம் கஷ்டம் என்றாலும் – தொடர்ந்து சிரமமாக இருந்தாலும் – நாட்டில் எஞ்சியிருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச நீதி, நியாயத்தின் மீதாவது நம்பிக்கை வைத்து, காய் நகர்த்தினால், தமிழர்களுக்கு சற்றேனும் நியாயம் கிடைக்க வழி உண்டு என்ற நம்பிக்கையை இந்த நீதித்துறை செயற்பாடுகள் நமக்குத் தந்துதான் நிற்கின்றன.

# தமிழின இருப்புக்காக ஒன்றாய் எழவேண்டும்!

## தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தல்



தமிழின இருப்பு மற்றும் பாதுகாப்புக்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்ப வேண்டும் என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்காக விசேடமான நிதி ஒதுக்கீட்டை நல்லாட்சி அரசாங்கம் உட்பட எந்த அரசாங்கமும் செய்யவில்லையென அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியாவில் கடந்த (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை – இந்திய ஒப்பந்தமானது தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வாக இல்லாவிட்டாலும், ஓர் ஆரம்பப் புள்ளியாக வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டது.

இதன்படி, எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட நெருக்கடிகளில் இருந்து காப்பாற்றிக்கொள்ளும் நோக்குடனேயே அதனை தோழர் பத்மநாபாவும் ஏற்றுக்கொண்டார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 33 வருடங்கள் கடந்திருக்கின்ற நிலையிலே தற்போது ஆட்சியில் இருக்கக் கூடிய கோட்டாபய ராஜபக்ஷ அரசு இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெற்ற சர்வதேச ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக மீறுகின்ற வகையிலேயே நடந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்கள், சொத்து அழிவுகளில் இருந்து தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.

இதேவேளை, தற்சமயம் சிங்களப் பெரும்பான்மை மக்களுடைய வாக்குகளுடன் ஆட்சியில் உள்ள அரசாங்கமானது அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பூகோள அரசியல் போட்டிகளுக்குள் சிக்குண்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக இந்திய அரசாங்கம் மிகக் காத்திரமான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையே ஒரு பரந்துபட்ட பலமான ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இவ்வாறு கட்டியெழுப்பப்படும் போதே, இந்தியாவோடும் ஏனைய சர்வதேச நாடுகளுடனும் இராஜதந்திர ரீதியாக அணுகி எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய அரசியல் இருப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 7 பிள்ளைகளின் தந்தை குளத்தில் வீழ்ந்து சாவு!

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள உறுகாமம் புதூர் குளத்தில் கடந்த (புதன்கிழமை) இரவு விழுந்து மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

உறுகாமம் புதூர் கிராமத்தில் வசிக்கும் அப்துல் காதர் அப்துல் ஸலாம் (வயது 58) எனும் 7 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது–

வழமைபோன்று இவர் உறுகாமம் புதூர் குளத்தில் இரவு நேர மீன்பிடிக்காக புதன்கிழமை இரவு 9 மணியளவில் வீட்டிலிருந்து குளத்துக்குச் சென்றுள்ளார். பின்னர் சிறிது நேரத்தில் இவர் குளத்தில் விழுந்து உயிரிழந்து கிடப்பது பற்றி சக மீனவர்கள் கண்டு சடலத்தை மீட்டெடுத்துள்ளனர்.

இது பற்றி கரடியனாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சடலம் உடற் கூற்றுப்பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெளிநாடுகளில் சிக்கிய 93 பேர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 93 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி சீனாவின் குவாங்சோவிலிருந்து நால்வரும் அபுதாபியிலிருந்து ஐவரும் கட்டார் – தோஹாவிலிருந்து 39 பேரும் மஸ்கட் – ஓமானிலிருந்து 30 பேரும் பாகிஸ்தான் – கராச்சியிலிருந்து 13 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பிய அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பல்வேறு நாடுகளிலும் தொழில் வாய்ப்புக்காக 180 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேனாவிலும் கவனம் தேவை பொலிஸார் எச்சரிக்கை விடுப்பு

வணிக இடங்களுக்குச் செல்லும்போது தங்கள் சொந்த பேனாவை எடுத்துச் சென்று பயன்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

இதன்மூலம் அவர்கள் தங்கள் விவரங்களை நுழைவாயிலில் உள்ள பதிவு புத்தகத்தில் பாதுகாப்பாக பதிவு செய்யமுடியும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் சொந்த பேனாவை எடுத்துச் சென்று இவ்வாறு பயன்படுத்துவது பாதுகாப்பானதுடன், சுகாதாரமானதாகவும் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன், பீடாதிபதி, இந்துக்கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்

# சேர்.பொன். இராமநாதனின் பன்முக ஆளுமைகள்



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெருவள்ளலாருமான சேர். பொன். இராமநாதனின் தொன்னூறாவது குருபூசை தினவிழா இன்றாகும் (நவம்பர் 21 ஆம் திகதி). அதனையொட்டி இச் சிறப்புக் கட்டுரை வெளியாகிறது.**

இலங்கையின் ஆன்மீகப் புலமைப் பாரம்பரியத்தை உலக அரங்குக்கு இட்டுச் சென்றவர்களுள் சேர்.பொன்.இராமநாதனுக்குத் தனியிடமுண்டு. அத்துடன், இலங்கை மணித்திருநாட்டில் சைவத் தமிழ்ச் சமூகத்தின் அடையாளம், பண்பாடு, அரசியல், கல்வியியல், காலனித்துவ விடுதலை உள்ளிட்ட பல்வேறு பணிகளை திரிகரண சுத்தியோடு முன்னெடுத்து அருந்தொண்டாற்றிய பெருந்தலைவராகவும் திகழ்ந்தவர் அவர்.

அந்நியராட்சியின் கீழ் பாமரராய், விலங்குகளாய், கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், வாயிருந்தும் ஊமையராய் நாமது தமிழரென வாழ்ந்திருந்த சூழலில் எம்மை மீட்டெடுக்க வந்த பெரியார்களில் ஆறுமுகநாவலர் முதன்மையானவர். நூற்பதிப்பு, உரை, துண்டுப்பிரசுரம், பாடசாலை நிறுவுதல், பாடநூலாக்கம், நூலாக்கம், பிரசங்கம், சமூகப்பணி என பல்தளங்களில் இயங்கி சுதேசத் தமிழ், சைவப்பண்பாட்டை மீட்டெடுத்த நாவலர் தனக்குப்பின் சைவத்தமிழ்ச் சமூகத்துக்கு தலைமை தாங்கத் தேர்ந்தெடுத்த மாமனிதரே சேர். பொன்.இராமநாதன்.

நாவலரின் தீர்க்கதரிசனம் பொய்க்கவில்லை. பொன்னம்பல முதலியாருக்கும், செல்லாச்சி அம்மைக்கும் பிறந்த இரண்டாவது மகனே இராமநாதன் ஆவார். கொழும்பு றோயல் கல்லூரி, சென்னை பிரெசிடென்சி கல்லூரிகளில் கற்று வழக்கறிஞராகத் திகழ்ந்தவர்.

காலனித்துவ அரசில் பல்வேறு பதவிகளை வகித்தவர். தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் எனப் பன்மொழிப் புலமையுள்ளவராகவும் இன ஐக்கியத்துக்காகப் பாடுபட்டு உழைத்தவராகவும் சேர்.பொன். இராமநாதன் அடையாளப்படுத்தப்படுகிறார். பௌத்த பிரம்மஞான சபையில் பொருளாளராகப் பதவி வகித்ததும் அதையொத்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவராகத் திகழ்ந்ததும் இதற்குத் தக்க உதாரணங்களாகும்.

தேசத்தின் விடுதலைக்கு இன ஐக்கியத்தின் அவசியத்தை உணர்ந்து அதற்காகப் பாடுபட்டதோடு, அதற்காகவே வாழவும் விரும்பினார். சிங்களவரும் தமிழரும் இனவேறுபாடு அற்று வாழ வேண்டும் என்று விரும்பியவர். இரு இனத்தவராலும் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த் தலைமை இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தலைவராக விளங்கிய பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் சேர். பொன். இராமநாதன் பற்றிக் குறிப்பிடுகையில், இலங்கையின் தவப்புதல்வர்களில் ஒருவர் சேர். பொன். இராமநாதன் என்பதில் என்றும் எவர்க்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலமாக இலங்கையின் அரசியல் வானில் ஈடு இணையற்று பிரகாசித்த இராமநாதன் அவர்கள் இவ்வுலகிலே தம்புகழை நிறுவிச் சென்ற பெருமக்களுள் ஒருவர் என்பதனை ஊரும் உலகமும் ஒப்புக்கொண்டுள்ளன. அன்னாரின் நினைவாக அண்மையில் முத்திரை வெளியிட்டும், அன்னார் தூர திருஷ்டியுடன் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியை இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தின் நடுமையமாகப் பிரகடனம் செய்தும், அங்கே வளாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டும் அரசு அன்னாருக்குச் சிறப்புச் செய்திருப்பதை நாம் காண்கிறோம். இராமநாதன் அவர்கள் தேசிய பெருமக்கள் வரிசையில் நிலையான இடம் பெற்றிருப்பதை இத்தகைய பாராட்டுச் செயல்கள் தொடர்ந்து நினைவூட்டுவனவாய் உள்ளன என்றார்.

சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஆண்களின் கல்வி மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகப் பெருஞ் சிறப்புடன் மிளிர்கின்றது. அவர் கனவு கண்ட இந்துப் பல்கலைக்கழகம் இதுவரை உருவாகாது விடினும் இந்து நாகரிகம், சைவசித்தாந்தம், சமஸ்கிருதம் ஆகிய கற்கைப் புலங்களை உள்ளடக்கிய இந்துக் கற்கைகள் பீடத்தைக் கொண்ட இலங்கையின் தனித்துவம் மிக்கதொரு பல்கலைக் கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திகழ்கின்றமை சிறப்பானதாகும்.

நாகரிகம், பண்பாடு, சைவசித்தாந்தம், சங்கத மொழியாகிய வடமொழி, யோகநெறி என்பன கல்லூரிகளில் கற்பிக்க வேண்டும் என்பது அவரின் இலட்சியமாக இருந்தது. அந்த இலட்சியத்தை இந்துக்கற்கைகள் பீட புலங்கள் நிச்சயம் நிறைவேற்றும்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் இடையில் வேறுபாடற்றவர். செல்வந்தர், கற்றவர், சட்டத்தரணி மற்றும் அரசியல் செல்வாக்கு, பதவி எனப் பல் அடையாளங்களைப் பெற்றிருந்தும் மக்களோடு மக்களாக நின்று எந்த எதிர்பார்ப்பும் இன்றி அவர்களுக்காகப் பெரும்பணியாற்றிய பெருமகனார்.

இலங்கையின் கல்விப் பாரம்பரியத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. ஆனால் காலனித்துவத்துக்கு முற்பட்ட – குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டுக்கு முன் இலங்கைப் பெண்கள் கல்வி கற்றவர்களாக இருந்தனர் எனச் சொல்ல முடியவில்லை. பௌத்த பிக்குனிகளே கல்வி கற்ற பெண்களாக இருந்தனர். தமிழ்ச் சூழலில் பெண் புலவர்கள் எவரையும் அறிய முடியவில்லை. சுதேசப் பண்பாட்டியலில் கல்வியறிவு பெற்றிருந்தும் வீட்டு எல்லையைத் தாண்ட முடியாத சூழல் காணப்பட்டிருக்கலாம்.

19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கைக்கு வருகைதந்த கிறிஸ்தவ மிஷனரிகள் தம் சமயத்தைப் பரப்புவதற்காகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். அவற்றின் வழி மதம் மாற்றச் செயற்பாடு இடம்பெற்றாலும் கிறிஸ்தவ சமய ஈடுபாட்டை மேம்படுத்தவும் உறுதிபட நிலைநிறுத்தவும் கட்டிறுக்கமான செயற்பாடு தேவைப்பட்டது. அதற்காகப் பெண் கல்வி என்னும் உபாயத்தைக் கண்டறிந்தனர். சுதேசசமயப் பெண்களைத் தம் சமயத்துக்கு மாற்றி கல்வியறிவூட்டி கிறிஸ்தவத்தை உணர்வு ரீதியாக ஊட்டுவதனூடு குடும்பத்தில் அதனை வளர்த்தெடுக்க முடியும் என நம்பினர். அவ்வாறே செயற்படுத்தினர்.

இவற்றை அவதானித்த சேர். பொன். இராமநாதன் ஆணொடு பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ வழி வகுத்தார். சுதேச சைவ மகளிர் தம் பண்பாட்டுச்சூழலில் கல்வி கற்க ஒரு பாடசாலையை நிறுவ விரும்பினார்.



அதன் பயனாக 1913ஆம் ஆண்டு ஜனவரி 20 இல் மருதனார்மடத்தில் மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவினார். அதுவே இந்நாளில் இராமநாதன் மகளிர் கல்லூரி எனலாயிற்று.

அவர் முதன்முதல் உருவாக்கிய கல்லூரி இம்மகளிர் கல்லூரியே என்பதன் வழி பெண்களின் கல்வியறிவின் அவசியத்தை உணர்ந்து செயலாற்றியமை கவனிக்கத்தக்கதாகிறது. வீட்டைவிட்டு வெளிவராத பண்பாட்டின் பெயராலான, அவ்விறுக்கமான சூழலில் வீட்டிலிருந்து கற்பதற்கு சமமான விடுதிகளை உருவாக்கினார். சைவ இலக்கியங்களையும், சுதேச நூல்களையும் பாடக் கலைத்திட்டத்தில் இணைத்ததோடு ஆங்கில அறிவையும் பெற வழிசமைத்தார்.

கல்வி திரிகரண சுத்திக்குரியதாக இருக்க வேண்டும் எனக் கருதிய அவரின் எண்ணம் அக்கல்லூரியின் மகுட வாசகம் ஆகிற்று. சைவமும் தமிழும் ஆங்கிலமும் பாடவிதானமாயிற்று. குடும்ப வாழ்க்கைக்கு உதவக்கூடிய தையல், சமையல், சுகாதாரமும் கற்பிக்கப்பட்டது. கல்லூரியில் வழங்கப்பட்ட கல்வி, கல்விக் கோவை விதிகளையும் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரித் தேர்வுக்குரியதாகவும் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குரியதாகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய சூழ்நிலையில் இவற்றைக் கற்பிக்கக்கூடிய பெண் ஆசிரியர்களைப் பெறுவதிலும் சிரமம் இருந்துள்ளது. இதனால் இராமநாதன் கல்லூரி வளாகத்திலேயே பெண்கள் ஆசிரியைப் பயிற்சிக் கலாசாலையையும் ஆரம்பித்துத் திறம்பட நடாத்தியுள்ளார். இக்கலாசாலையில் இருந்து வந்தவரே ஈழத்து முதல் பெண்மணியக்காரர்,




உலகறிந்த முதல் பெண் பிரசங்கி எனப் பலவாறு வருணிக்கப்படுகின்ற சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார்.

சைவ மகளிர் கல்வி பெறவும், தொழில் வாய்ப்புக்களைப் பெறவும் அதனூடான அனைத்துச் சுதந்திரங்களையும் பெற்றுச் சுகிக்கவும் உழைத்த முன்னோடி சேர். பொன். இராமநாதன். இன்றைய சூழலில் பெண்கள் பெரும்பெரும் பதவிகளை அலங்கரிக்கவும் ஆட்சிசெய்யவும் நுண்மதியினராய் தேசத்தைக் கட்டியெழுப்பவும் சைவத்தமிழ்ச் சமூகத்தை ஆற்றுப்படுத்திய தீர்க்கதரிசி இராமநாதன் ஆவார்.

**சேர்.பொன். இராமநாதன் ஒரு சிறந்த நியாயவாதியாகவும், ஆற்றல் நிறைந்த சொற்போர் நிபுணராகவும், பண்பட்ட உன்னத நாவல்லோராகவும், திறமைசால் நிர்வாகியாகவும், இவையாவிலும் மேலாக மிக்குயர்ந்த மெய்யியலாளராகவும், பிரமஞானியாகவும் விளங்கினார்.**

அவரைச் சைவத்தமிழ்ச் சமூகம் மிகுந்த நன்றியுடன் என்றென்றும் நினைவு கூருகின்றது. இன்று உலக அரங்கில் முதன்மையுற்றிருக்கும் யோகக்கலை பற்றிய பிரக்ஞைக்கு அன்றைக்கே முழு ஆதரவு நல்கியவர் சேர்.பொன். இராமநாதன். யோகம், தியானம் என்பவற்றில் தலைசிறந்து விளங்கியவர். பாடசாலைக் கலைத்திட்டத்தில் அதனை இணைத்து ஆன்மீகப் பயிற்சியாக வழங்க வழி சமைத்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சேர். பொன். இராமநாதனின் ஞானக்குருவாக தஞ்சாவூரைச் சேர்ந்த அருட்பரானந்த சுவாமிகள் விளங்கினார். இவரின் அருட்பார்வையினால் இவர் தவயோகியாகவே மாறிவிட்டார். பகவத்கீதை கூறும் கருமயோகத்தின் வழித்தடத்தில் இவரின் பிற்கால வாழ்க்கை அமைந்துவிட்டது. தியானயோகசாதனைகளில் தமது நேரத்தைக் கழித்தார். இவரின் சீரிய யோக சிந்தனைகளை நினைவுபடுத்துவதற்காகவே இந்துக்கற்கைகள் பீட வரைபில் யோகநெறி ஒரு தனித்துறையாக அமைய சிபார்சு செய்யப்பட்டது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் இனவிகிதாசாரத்தை அழித்து வடக்கு, கிழக்கில் சிங்கள குடியேற்றங்கள்!

## நாடாளுமன்றில் சாள்ஸ் எம்.பி. காட்டம்



தமிழர்களின் இன விகிதாசாரத்தை அழித்து வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை செய்துகொடுக்கவே மகாவலி அதிகாரசபை உருவாக்கப்பட்டது, மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் இன்றைய செயற்பாடுகளும் சிங்கள மயமாக்கலை நோக்கியதாவே உள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, வரவு செலவுதிட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வேளையில் தலைமை தாங்கிய பிரதான இருவருமே இன்று ஆட்சியில் உள்ளனர். இவர்களின் தலைமையில் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு எந்தவித திருப்திகரமான நிவாரணங்களையும் முன்வைக்கவில்லை. யுத்தத் தால் பாதிக்கப்பட்ட மக்களையும், அவர்களின் கிராமங் களை மீள் கட்டுமானம் செய்யவும் எந்தவித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோல் இந்த வரவு செலவு திட்டத்தில் மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட அமைச்சுக்களான சுகாதாரம், கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம், கடற்தொழில் அமைச்சுக்களுக்கு என ஒட்டுமொத்தமாக வழங்கப்பட்டுள்ள நிதிக்கு சமமான நிதியை பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளனர்.

இலங்கை அபிவிருத்தியடைய வேண்டும் என்றால், வரவு – செலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகை இல்லாதிருக்க வேண்டுமானால், இந்த நாட்டில் சகல இன மத மக்களும் சமமாக நடத்தப்படக்கூடிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோல் இந்த சபையில் விடுதலைப்புலிகள் தொடர்பில் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன சில கருத்துக்களைக் கூறியிருந்தார், இதற்கு எமது தரப்பு நியாயங்களை சபையில் முன்வைக்க வேண்டும் என நினைக்கின்றேன். தமிழர்களின் தாயக பிரதேசங்களில் தமிழர்களின் இன விகிதாசாரத்தை எவ்வாறு குறைத்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

1970 ஆம் ஆண்டு மாசி மாதம் 28 ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்டது. உருவாக்கப்பட்டு அடுத்த மாதமே நாடாளுமன்றம் அதற்கான அங்கீகாரத்தையும் கொடுத்தது. அன்றில் இருந்து இப்போது வரையில் 50 ஆண்டுகளில் வடக்கு கிழக்கில் 40 வீதம் தமிழர்களின் இன விகிதாசாரத்தை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அழித்துள்ளது.

இதில் குறிப்பாக 1988 ஆம் ஆண்டு மகாவலி எல் வலயத்தின் ஊடாக வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா பிரதேசங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் கையகப்படுத்தி, அதேபோல் 2008 ஆம் ஆண்டு இரண்டாம் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தமிழர்களின் பூர்வீக நிலங்களை, கிராமங்களை சிங்கள பெயர்களாக மாற்றினர். அதேபோல் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் புதிதாக பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன.

தமிழர்களுக்கு 1960 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நில உறுதிப்பத்திரத்தை எமது மக்கள் வைத்துக் கொண்டுள்ள நிலையில் அந்த காணிகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் பறிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் எமது மக்களுக்கு மாற்றுக் காணியோ வேறு ஏதும் நடவடிக்கையோ இல்லாத சூழ்நிலை காணப்படுகின்றது.

தமிழர்களின் இன விகிதாசாரத்தை அழித்து வடக்கு, கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை செய்துகொடுக்கவே மகாவலி அதிகாரசபை உருவாக்கப்பட்டது. சிங்கள ஆட்சியாளர்களின் மோசமான சிந்தனையின் நோக்கத்தில் உருவாக்கப்பட்டதே இதுவாகும். இதுதான் ஆயுதப் போராட்டம் உருவாக்கவும் காரணமாக அமைந்தது.

தமிழர்களை நேரடியாக அழித்த காரணத்தினால் அன்றைய சூழலே எமது இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தது. மாறாக எவரும் விரும்பி ஆயுதத்தை ஏந்தவில்லை. இன்றும் சிங்கள ஆக்கிரமிப்புகளில் எமது பிரதேசங்கள் சிக்கிக்கொண்டுள்ளன. நிலங்களை அபகரித்து இராணுவத்துக்குக் கொடுக்கும் நோக்கமே இன்றும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.– என்றார்.

# சிறைச்சாலை சம்பவம் தொடர்பாக விசாரிக்க குழு நியமிக்கப் பரிந்துரை!

நாட்டின் பல சிறைச்சாலைகளில் பதிவான அண்மைய சம்பவங்கள் தொடர்பாக அமைச்சரவை மட்டத்தில் நியாயமான விசாரணை மேற்கொள்ள ஒரு குழுவை நியமிக்குமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த பணிக்காக மூன்று உறுப்பினர்களுக்கும் குறையாத மேலதிக செயலாளர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்படும் என சிறைச்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை சிறைச்சாலையில் ஒரு கைதி மரணம், போகம்பறை சிறைச்சாலையில் கைதிகள் தப்ப முயற்சி மற்றும் சிறைச்சாலையில் கைதிகளின் ஆர்ப்பாட்டங்கள் போன்ற ஏனைய விடயங்கள் தொடர்பாக சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளும் பணிகள் இந்த குழுவிடம் வழங்கப்படும்.

மூன்று வாரங்களுக்குள் இந்த அறிக்கையை அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களுக்கு எதிராக சட்ட மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேநேரம் சிறைச்சாலைகளுக்குள் கொவிட் – 19 பரவுவது தொடர்பாக சிறப்பு கவனம் செலுத்தவும், மேலும் வைரஸ் பரவாமல் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும் சிறை அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரிவினையை உருவாக்கி இனவாதத்தைத் தூண்டும் பிரதானியாக நாட்டில் ஜனாதிபதி கோட்டா உள்ளார்!

## முஜிபுர் ரஹ்மான் கூறுகிறார்



ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான உரையில் அவர் ஒட்டுமொத்த மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தாது அவரை ஆதரித்த தரப்பை மாத்திரமே கருத்தில் கொண்டுள்ளார், இந்த நாட்டில் பிரிவினையை உருவாக்கி வர்க்கவாதம், இனவாதத்தைத் தூண்டும் பிரதானியாக ஜனாதிபதியே உள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

அரசாங்கத்தின் இரண்டாவது வரவு–செலவுதிட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது, அதேபோல் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார். அவர் உரையாற்ற முன்னர் பல பரபரப்புகள் காணப்பட்டன,

ஆனால் அவரது உரையில் சில காரணிகளை முன்வைத்தார். இதில் அவர் இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் ஜனாதிபதி என்பதை மறந்து, தனது வெற்றிக்கு வாக்களித்த மக்களை மாத்திரம் நினைவுபடுத்தி பேசினார். எனவே அவரது உரை நாட்டு மக்களுக்கான உரை அல்ல. இது பிளவுக்கான ஆரம்பம் என்பதை அவர் காட்டுகின்றார்.

ஜோ பைடன் அண்மையில் ஒரு விடயம் கூறினார், அமெரிக்காவில் இனி சிவப்பு, நீல பிளவுகள் இல்லை, ஒட்டுமொத்த அமெரிக்காவாக நாம் இணைய வேண்டும் என்றார். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றும் வேளையில் இன பிளவை, வர்க்க வாதத்தை ஊக்குவித்துள்ளார். அடிப்படைவாதத்தை நிறுத்த வேண்டும் எனக் கூறிய ஜனாதிபதியே பிளவுகளை ஏற்படுத்தியுள்ளார்

இந்த நாட்டை அபிவிருத்தியின் பக்கம் கொண்டுசெல்ல வேண்டும் என்றால், நாடாக ஒன்றிணைய வேண்டும் என்றால், முதலில் சகல இன மத மக்களையும் ஜனாதிபதி அரவணைக்க வேண்டும். ஆனால் இன்னும் பிரிவினையின் பக்கமே ஜனாதிபதி நின்று சிந்திக்கின்றார். இது ஜனநாயக நாட்டிடைக் கட்டியெழுப்பும் கொள்கை அல்ல.

அதேபோல் பிரதமர் முன்வைத்துள்ள வரவு – செலவுத் திட்டம் மிகவு பலவீனமான வரவு – செலவுத் திட்டமாகும். வருமானத்தை பலப்படுத்த அரசாங்கம் எந்த வேலைதிட்டதையும் கையாளவில்லை, வெறுமனே சீனாவை நம்பி வரவு – செலவுத் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். கடந்த ராஜபக்ஷ ஆட்சியில் போன்று நாட்டின் சொத்துக்களை விற்று வருமானத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர்.– என்றார்.

# யாழ்.பல்கலை வெளிவாரி முடிவுகளை விரைவாக வெளியிடுமாறு உத்தரவு!

## பிறப்பித்தார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் வெளிவாரிக் கற்கைகளுக்கான பரீட்சை முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பணித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடந்த வணிகமாணி (பழைய பாடத்திட்ட) பரீட்சை முடிவுகள் தாமதமாவது தொடர்பாக பரீட்சார்த்திகளால் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து இடம்பெற்ற பல்கலைக்கழக மூதவைக் கூட்டத்தில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணிப்பாளரிடம் துணைவேந்தர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் பற்றி பணிப்பாளர் மற்றும் கற்கை நெறி இணைப்பாளர் ஆகியோர் விளக்கமளித்தனர்.

உள்வாரியாக நடத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகளை இரண்டு மாத காலத்தினுள் கையளிப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அதே போலவே வெளிவாரிப் பரீட்சை முடிவுகளையும் விரைந்து வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணைவேந்தர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# 9 கோடி ரூபா நிதி மோசடி குற்றச்சாட்டின்பேரில் உரக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் கைது!

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2017 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் இலங்கை உர கூட்டுதாபனத்தின் தலைவராக பணியாற்றியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு இடம்பெற்ற 9 கோடி ரூபா நிதி மோசடி தொடர்பில் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி பதியப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் இவரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமையுடன் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைக் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுர மானது. அதன் மிகுதி இங்கு பிரசுர மாகின்றது.



"சென் பீற்றர் தேவாலய குண்டு வீச்சு, செஞ்சோலை சிறுவர் இல்லத் தாக்குதல், யாழ் போதானா வைத்தியசாலை மீதான தாக்குதல்கள் காணாமல் போன சிறுவர்கள் நிலை குறித்து கரிசனை கொள்வதாக தெரியவில்லை, மறக்கப்பட்டனவாயிற்று."

# சிறுவர் உரிமைகள் மீதான 30 ஆண்டு கால மீள்வாசிப்பு

**ஜெகநாதன் தற்பரன்** (சட்டமுதுமாணி) சட்டத்தரணி, அமைப்பாளர், சமூகநியாயத் திற்கானதும் சிறுவர் உரிமைகளுக்குமான சட்டத்தரணிகளின் அமைப்பு (ஆசியப்பிராந்தியம்)

இலங்கை அரசானது, சிறுவர் உரிமைகள் சமவாயத்துடன் இணைந்ததான இரு ஆவணங்களையும் 2000 ஆம் (புத்தாயிரமாம்) ஆண்டின் பின்பு ஏற்றுக்கொண்டது. இதன் மூலம், அரசானது, சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும், இணையாவணங்கள் குறித்து அதி தீவிர கூடுதல் கவனம் செலுத்தவும் எதிர்பார்க்கப்பட்டது. பாரிய உரிமை மீறல்கள், மற்றும் சிறுவர் விற்பனை செய்யப்படல், கடத்தப்படுதலில் இருந்து பாதுகாப்பு பெறவும், இவற்றினை ஆய்வு செய்யவும், கண்காணிப்பு செய்யவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன்படி, 2000 ஆம் ஆண்டளவில், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த அனைத்துலக ஆய்வுக்கு அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் (த.வி.பு) ஒப்புதல் அளித்திருந்தமையுடன் பாரிய பங்களிப்பினையும் வழங்கியிருந்தனர்.

மேற்படி ஆய்வின் விளைவாக, த.வி.புலிகள் வருடத்தில் ஒரு கிழமை யுத்த நிறுத்தம் செய்யவும், சிறுவர் போராளிகளை விடுவிக்கவும், 18 வயத்திற்கு உட்பட்ட சிறுவர்கள் போராளிகளாக உள்வாங்கப்படுதலினை முற்றாக விடுவிக்கவும் இணக்கம் தெரிவித்திருந்தனர். சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனும் பின்பு இலங்கை இராணுவத்துடனும் பங்காண்மை முறைமை மூலம் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வந்தன. கருணா குழு பிரிவடந்து வந்தவுடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடனும் இத்தகைய பங்காண்மை விஸ்தரிக்கப்பட்டிருந்தது.








இங்கு அவதானிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான விடயம் என்னவெனில், அரசின் கட்டுப்பாடுகள் தளர்வானதும் சீரற்றிருந்த பகுதிகளில் போராட்டக் குழுக்களும் அவற்றின் ஆதரவு அமைப்புக்களும் சிறுவர் உரிமைகளுக்கு பொறுப்புடமைக்குள்ளாக்கப்பட்டிருந்தன என்பதாகும். இருந்த பொழுதிலும், சென் பீற்றர் தேவாலய குண்டு வீச்சு, செஞ்சோலை சிறுவர் இல்லத் தாக்குதல், யாழ் போதானா வைத்தியசாலை மீதான தாக்குதல்கள் காணாமல் போன சிறுவர்கள் நிலை குறித்து கரிசனை கொள்வதாக தெரியவில்லை, மறக்கப்பட்டனவாயிற்று.

த.ம.வி.பு. அமைப்புடன் முத்தரப்பு ஒப்பந்தமொன்றினை இலங்கை அரசும், யுனிசெவ் அமைப்பும் மேற்கொண்டிருந்தன. இதன் மூலம் சிறுவர் போராளிகள் குறித்த கரிசனைகள் அதிகரித்ததாக நோக்கப்பட்டது. இருந்த போதிலும், சம்பந்தப்பட்ட ஆயுத குழு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு, அதன் தலைமைகள் பொதுமக்கள் சேவைக்காக உள்வாங்கப்பட்டு, கௌரவ பதவிகள் வழுங்கப்பட்டன. விமர்சனங்கள் மேற்கிளம்பின. இவ் ஆயுத குழு தடை செய்யப்படவேண்டியதென்ற கூற்றும், அதன் தலைமைகள் போர்க் குற்றங்களுக்காகத் தண்டனை பெற வேண்டும் என்கின்ற கோரிக்கைகளும் மேற்கிளம்பின.

இவற்றுடன், அமைச்சினது விவரிப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சிறுவர் உரிமைகளினை யதார்த்தமாக்குதல் தொடர்பான பொறுப்புடமை என்பது பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியிருந்தது. மாறி வரும் அமைச்சின் சுற்றறிக்கைகள் ஏற்கனவே செயற்பட்டு வந்த கண்காணிப்புக் குழுக்களில் மாற்றங்களினையும் ஏற்படுத்தியிருந்தன.

இதற்கு, சிறப்பானதொரு உதாரணமாக, யாழில் மாவட்ட ரீதியில் செயற்பட்டு வந்த சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழு, சிறுவர் முன்பள்ளி சார் மேம்பாட்டுக்குழு, சிறுவர் தொழிலாளர் சம்பந்தமான செயற்பாட்டுக்குழு, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் செயற்பட்டு வந்த சிறுவர் பாதுகாப்புக் குழு என்பன 2016 இல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக ஒன்றிணைக்கப்பட உத்தரவிடப்பட்டிருந்தது. இத்தகைய உத்தரவு அக்காலப்பகுதியில் பணி புரிந்திருந்த அரச அலுவர்களினால் தன்னிச்சையாக எடுக்கப்பட்டிருந்த ஓர்ப்முடிவாகவே இன்னமும் நோக்கப்பட வேண்டியுள்ளது. ஒன்றிணைவு மாவட்ட மட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த பொழுதிலும் தனிச் செயற்பாடுகள் முடிவுறுத்தப்படல் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கவில்லை. இதன்பின் யாழ் போதனா வைத்தியசாலையில் சிறப்புற இயங்கி வந்த சிறுவர் பாதுகாப்புக் குழு செயற்பாடு இழந்தது.

இவ்வமைப்பின் ஆவணங்கள், உடைமைகள் யாவும் மாவட்டச் செயலகத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்தன. இதற்கு பாராமுகமாக இருந்து யுனிசெவ் மற்றும் சேவ் த சில்ரன் அமைப்புக்களும் உடந்தையாயின. ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குழு இரு மாதத் திற்கு ஒரு தடவை கூடி அனைத்து விடயங்களினையும் ஒரே நாளில் கலந்துரையாடுகின்றன.

02

**மாறி வரும் உலகின் சர்ச்சைக்குரிய விடயங்கள்**

சிறுவர் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச நியதிகளினை 192 நாடுகள் கையொப்பமிட்ட பொழுதிலும், 57 நாடுகள் மட்டுப்பாடுகளுடனேயே குறிப்பிட்ட ஆவணத்தினை ஏற்றுக்கொண்டுள்ளன. அத்துடன், 32 நாடுகள் மட்டுமே உள்ளூர் சட்டங்களுக்குள் சிறுவர் உரிமைகளினை உள் வாங்கியுள்ளன. இலங்கை அரசாங்கம் மட்டுப் பாடுகள் எதுவும் இன்றி, ஆவணத்தினை ஏற்று நடைமுறைப்படுத்துவதாக ஒப்புதல் அளித்துள்ள பொழுதிலும் இதுவரை உள்ளூர் சட்டமாக இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், சிறுவர் சம்பந்தமான உறுப்புரைகளின் தெளிவான பொருள்கோடலினை, சம்பந்தப்பட்ட கருத்தை பிரயோகிப்பதன் மூலமாக பல்வேறு அமைப்புக்களும் உள்ளூர் சட்டங்களுக்குள் சிறு வர் உரிமைகளினை உள்வாங்கியுள்ளதாக மாற்றியமைக்கத் தவறவில்லை.

உதாரணமாக, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சிறுவர் தொழிலாளர் சம்பந்தமாகவும் கட்டாய கல்விக் கொள்கையின் உச்ச வயதெல்லை உட்பட்ட முறைசாரா, தொழில்முறை கல்வி தொடர்பில் யுனெஸ்கோ நிறுவனமும், சிறுவர் நீதிபரிபாலனம் மற்றும் ஆரம்பக்கல்வி தொடர்பாக சர்வதேச தொண்டு நிறுவனங்களும் அரசுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்திருந்தன.

இதே காலப்பகுதியில், ஆயுத மோதல்களில் அல்லலூறும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கிறோ மால் மண்டேலா அவர்களின் அறிக்கையும் பிரேரணைகளும் உள்ளூர் சட்டங்களுக்குள் சிறுவர் உரிமைகளினை உள்வாங்கியுள்ளனவாக மாற்றியமைப்பதில் முக்கியத்துவம் வாய்ந்த விடயப்பரப்புகளாகும். இவை யாவும் மாறி வரும் உலகில் சிறார் பாதுகாப்பினையும், முற் பாதுகாப்பு செய்யப்படுவதன் அர்த்தத்தினையும் சிறுவர் சம்பந்தமான உறுப்புரைகளின் தெளிவான பொருள் கோடலினை விளக்கி நிற்கும்.

இவ்வாறே, அரசுகளின் அறிக்கைகள் மீதான அவதானிப்பினூடாகவும், கேட்கப்படுகின்ற கேள்வி பதில்கள் மூலமாகவும், எமது அரசாங்கங்கள் குறித்த ஏனைய அரச பிரதிநிதிகளின் அக்கறைகளும், வெளிப்பாடுகளும், எமது சிறுவர்களுக்கான சிறந்த வாழ்வியலினை யதார்த்தமாக்குவதில் பாரிய பங்கினை ஆற்றி நிற்கும்.

நாடுகளின் மாறுபட்ட நடத்தைகள் மற்றும் பிணிக்கும் கடப்பாடுகள்.

மலேசியா மற்றும் பர்மா (மியன்மார்) ஆகிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்தினை ஏற்று, நடைமுறைப் படுத்துகையில் தமது நாடுகளில் உள்ள 'சிறுபான்மை இன சிறுவர்களுக்கான உரிமைகள்' என்பதனை சமவாயம் ஏற்பு செய்யப்படுகின்ற வேளைகளில் மட்டுப்படுத்தியிருந்தன. அத்துடன், சிறுபான்மைக் குழுக்களின் உரிமை மறுப்பு கோரிக்கைகளினை மட்டுப்படுத்தியிருந்தன. மேற்படி மட்டுப்படுத்தப்படல் நடவடிக்கை மூலம் சர்வதேசத்திற்கு தமது நாடுகளின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தின. சிறுபான்மை இன சிறுவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுதல் என்பதனை நியாயப்படுத்த முற்பட்ட மேற்படி நடத்தைகள் குறித்து நெதர்லாந்து, இலங்கை, இந்தியா உட்பட்ட பல்வேறு நாடுகள் கண்டித்திருந்தமையுடன் பின்வரும் முடிவுகளினையும் எட்டியிருந்தன.



சிறுவர் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்பு பாகுபாடு காட்டாமை, உயிர்வாழ்தல் மற்றும் மேம்பாடுகளுக்காக அரும்பாடுபடல், தீர்மானங்கள் மேற்கொள்ளளில் பங்களிப்பு, சிறந்த நலங்களினை முதன்மைப்படுத்துதல் ஆகிய பிரதான கொள்கைகளுக்கு முரணாக எந்தவொரு அரசும் செயற்பட முற்றுணிபு கொள்ளலாகாது என்பதாகும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# நினைவேந்தலைத் தடுப்பதற்கு எதிரான மனுக்கள் நிராகரிப்பு!

## தேசியப் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தை விசாரிக்க மாகாண மேல்நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லையாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , நவம்பர் 20

மாவீரர் நாளை நினைவு கூரப் பிறப்பிக்கப்படும் தடை உத்தரவை இரத்து செய்து, நினைவேந்தலை மேற்கொள்ள அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரும் தடையீட்டு ஆணையை விசாரிக்கும் அதிகாரம் மாகாண மேல் நீதிமன்றிற்குக் கிடையாது எனக் கூறி அது தொடர்பான மனுக்களை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

நவம்பர் 27 ஆம் திகதி இடம்பெறும் மாவீரர் நாள் நிகழ்வுகளை தடை செய்யக்கூடாது என உத்தரவிடக்கோரி மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 3 வழக்குகள் இன்றையதினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டது. இதில் இரு வழக்குகள் தொடர்பான விசாரணை இன்று இடம்பெற்றது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஒன்றில் சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகளும், பிறிதொன்றில் வி.மணிவண்ணன் தலைமையிலான சட்டத்தரணிகளும் முன்னிலையான அதேநேரம் எதிராளிகளான அரசுத் தரப்பில் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்மரட்ண உள்ளிட்டோர் ஆஜராகினர்.

வழக்குக்குக்குரிய விடயம் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடுகின்றது, அரசமைப்பின் பிரகாரம் தேசிய பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்திற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியதும், பயங்கரவாத செயல்பாட்டை தூண்டும் இந்த விடயம் தொடர்பில் ஆணையிடும் நியாயாதிக்கம் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு இல்லை என அரச தரப்பில் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

சுமந்திரன் வாதம்

இந்தப் பூர்வாங்க ஆட்சேபனையின் மீது, தமிழ் மக்களிற்கான மக்களிற்கான நீதி சட்டத்தரணிகள் கூட்டின் ஏற்பாட்டாளருன் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தமது வாதத்தை முன்வைத்தார்.

அரசமைப்பின் 154 பிரிவு 4 மற்றும் 5 உறுப்புரை நிரல்கள் மாகாண சபைகளுக்கான அதிகாரத்தின் கீழ் இதற்கான நியாயாதிக்கம் இந்த மன்றுக்கு உண்டு. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கூட தமது பிள்ளைகளை நினைவு கூர்வது தடை எனப்படவில்லை. மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம் அரசமைப் பின் கீழ் முதலமைச்சரின் ஒப்புதலின் கீழ் என்றே கூறப்பட்டுள்ளது. கொவிட் 19இன் எனக்கூறி அரசு கண்கூடாகத் தெரியும் வகையில் அடக்கு முறையில் ஈடுபடுகின்றது. நினைவேந்தலிற்கு ஒன்று கூடினால் கொரோனா ஏற்படும். ஆனால், மாவட்டச் செயலகத்தில் 250 பேர் கூட்டம் வைக்கலாம்.

எமக்கு அரச அனுமதி தேவையில்லை. ஆனால் எம்மைத் தடுக்கும் உரிமை கிடையாது என்பதுதான் எமது வாதம். அடிப்படை உரிமையை, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 106 பிரிவின் கீழ் தடுக்க முடியாது. மாகாண சபையின் கீழ் பொலிஸ், சட்ட அதிகாரம் உண்டு. எனவே முதல் தோற்றத்தில் இந்த வழக்கை விசாரிக்க மேல் நீதிமன்றிற்கு நியாயாதிக்கம் உண்டு.

அரச தரப்பு இந்தப் பூர்வாக ஆட்சேபனையை கனவுலகில் இருந்து செய்கின்றனர். நினைவு கூர்தல் என்பது தமிழரின் மரபு உரிமை. மருண்டவனிற்கு இருண்டது எல்லாம் பேய் என்பது போன்ற செயல்பாடு இது. ஏனெனில் புலிகளை முற்றாக ஒழித்ததாகக் கூறும் அரசு 11 ஆண்டுகளின் பின்பு அதற்கு புத்துயிர் அளிக்கும் செயல் என்று இப்போது கூறுகிறது.

ஜே.வி.பியின் தலைவர் றோஹண விஜயவீரவை அந்த அமைப்பு இன்றும் அமைப்பு ரீதியில் நினைவு கூர முடியும் என்றால் தமிழ் மக்கள் ஏன் தங்கள் உறவுகளை நினைவு கூர முடியாது. - என்றார்.

நீதிபதி தீர்ப்பு

இந்த வழக்குகள் தொடர்பில் மனுதாரர்கள் தமது பிள்ளைகள் நினைவு தினம் எனக் கோரினாலும் நவம்பர் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையில் இடம்பெறும் நினைவு நிகழ்வுகளைத் தடை செய்யக்கூடாது எனப் பொதுப்படையாக கோருகின்றனர். இது இந்த வழக்கின் பலவீனமாக உள்ளதோடு தனியாக செய்யும் நினைவேந்தல் தொடர்பில் எந்த விடையத்தையும் தடை செய்யாத போதும் பொதுவெளியிக் ஒரு குழு அல்லது பட்டாளமாகக் கூடினால் கொரோனா காலத்தில் சுகாதாரம் பேணுவது கடினம் என நீதிபதி குறிப்பிட்டார்.

இதேநேரம் இந்த மனு பொதுவான நினைவேந்தலையே சுட்டி நிற்கின்றதோடு அது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடக் கூடியது என மன்று ஏற்கின்றது. அதன் அடிப்படையில் தேசிய பாதுகாப்பு கருதிய விடயத்தில் கட்டளையாக்கும் அதிகாரம் மாகாண மேல் நீதிமன்றிற்கு இல்லாத காரணத் தால் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என நீதிபதி தீர்ப்பளித்தார்.

# மாவீரர் வாரத்தைக் கடைப்பிடிக்க இந்த ஆட்சியில் அனுமதி இல்லை

## ராஜபக்ஷ அரசு திட்டவட்டம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் மாவீரர் நாள் வாரத்தைப் பிரகடனப்படுத்தியிருந்தார். இந்த வாரம் (மாவீரர் வாரம்) பயங்கரவாதிகளை நினைவு கூரும் வாரம். இவர்களை நினைவு கூர கடந்த நல்லாட்சி அரசு நாட்டின் சட்டத்தை மீறி அனுமதிவழங்கியது என்பதற்காக எமது இந்த ஆட்சியில் பயங்கரவாதிகளை நினைவு கூர நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம்.

- இவ்வாறு ராஜபக்ஷ அரசின் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளை நினைவு கூர அனுமதி கோரி தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்த முடியாது. அதற்கு அரசு தயார் நிலையிலும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாவீரர் தின நிகழ்வுகளைத் தடையின்றி நடத்துவதற்குத் தேவைப்பட்டால் ராஜபக்ஷ அரசுடன் பேசுவோம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு. எமது நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பு. இந்த நிலையில், அந்த அமைப்பின் சார்பில் பலியானவர்களை எப்படி நினைவு கூர முடியும்?

நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டமும், கொரோனாத் தனிமைப்படுத்தல் சட்டமும் நடைமுறையில் இருக்கின்ற போது பொதுவெளியில் விடுதலைப் புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகளை நடத்தவே முடியாது.



அதை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் மக்கள் விரும்பினால் போரில் உயிரிழந்தவர்களை தத்தமது வீடுகளிலிருந்து நினைவு கூரலாம். அதை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது. - என்றார்.

# எகிறும் பொலிஸ் கொத்தணி



இலங்கையில் மேலும் 8 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர்களுள் 6 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் கூறினார்.

அதனடிப்படையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட படை அதிகாரிகளின் எண்ணிக்கை 833 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களுள் 630 பொலிஸ் அதிகாரிகளும், 203 பொலிஸ் விசேட படை அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனாவுடன் பலர் நாடெங்கும் நடமாட்டம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



இலங்கையில் கொரோனா வைரஸ் உடம்பில் உள்ளவர்கள் இன்றும் வெளியில் சுற்றித் திரிகின்றார்கள். எனவே, அவர்களை இனங்காண பி.சி.ஆர். பரிசோதனைகளை மூலைமுடுக்கெல்லாம் விஸ்தரிக்க வேண்டும். இல்லையேல் தற்போது நிலவும் பேராபத்து தொடரும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் குறைந்தளவில் இனங்காணப்படும் மாவட்டங்கள் தொடர்பில் குறைந்த அவதானம் செலுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் அங்கு ஆபத்தான நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது.

தற்போது நாளாந்தம் 500 புதிய தொற்றாளர்கள் பதிவாவதுடன் 3 அல்லது 5 சாவுகள் பதிவாகின்றன. மேல் மாகாணத்தின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. அதிலும் கொழும்பு மாவட்டத்தின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது.

நாட்டில் கொரோனா வைரஸ் உடம்பில் உள்ளவர்கள் இன்றும் வெளியில் சுற்றித் திரிகின்றார்கள். அவர்கள் அனைவரும் இனங்காணப்பட வேண்டும். இல்லையேல் பேராபத்து தொடரும் . - என்றார்.

## உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தம் 25 முதல் ஆரம்பம்!

2020 கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய மாவட்டங்களில் வைத்து விடைத்தாள் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படவுள் ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய இந்தச் செயற்பாடுகள் முன்னெ டுக்கப்படவுள்ளன எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள் ளார்.

## வடக்கு - கிழக்கில் உழவர் சந்தை உருவாக்க வேண்டும் - சிவாஜிலிங்கம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உழவர் சந்தையை உருவாக்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சி யின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவா ஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

வடக்கு, கிழக்கு விவசாயிகள் தற் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ் வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தத்துக்குப் பின்னர் எங்களுடைய மக்கள் பல்வேறு வகையிலும் கஷ்டப்பட்ட வண்ணம் இருக்கின்றார்கள். பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தமை போல பல்வேறு சம்பவங்கள் அரங்கே றிக்கொண்டு இருக்கின்றன.

அதைவிட இன்னுமொரு கேள்வியை யும் கேட்க விரும்புகின்றோம். அதாவது தம்புள்ளையில் இருந்து வரும் மரக்க றிகளுக்கு பத்து வீத கழிவு இல்லை. தம்புள்ளையில் இருந்து வந்தால் ஒரு நீதியும் எங்களுடைய விவசாயிகளுக்கு பத்து வீத கழிவு என்றால் இது மிகவும் கொடுமையான ஒரு நடைமுறை. இந்த நடவடிக்கையிலிருந்து விலக்களிப்ப தற்கு ஏற்கனவே பல உள்ளூராட்சி மன் றங்களில் தீர்மானம் எடுக்கப்பட்டாலும் அது அமுல்ப்படுத்தப்படுவதில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இந்த நடைமுறையை உடனடியாக அமுல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உள் ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் நடவடிக்கையை எடுக்கவேண்டும். அவ்வாறு எடுக்கவில்லை என்றால் மக் கள் மிகப்பெரும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான போராட்டங்களுக்கு எங்களை தலைமை தாங்கும் நிலைக்கு தள்ளாதீர்கள் . - என்றார்.

## நாட்டின் வருமானத்தை உயர்த்த அரசிடம் எந்தத் திட்டமுமில்லை!

### தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 21

கடன் பெறுவதும் பணத்தை அச் சிடுவது மாத்திரமே வரவு - செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளது. மாறாக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான எந்த வழிமுறைகளும் அதில் இல்லை. அரசாங்கத்தின் இயலாமையே இதற்குக் காரணமாகும் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில் -

நல்லாட்சி அரசாங்க காலத்தில் 6 ட்ரில்லியன் ரூபா கடன்பெற்று நாட்டை கடன் பொறிக்குள் தள்ளியதாக அரசாங் கத் தரப்பினர் குற்றம் சாட்டியிருந்தனர். அதே நிலையைத்தான் அரசாங்கம் தற்போது இரண்டு வருடத்தில் 5 ட்ரில் லியன் கடன் பெற்றுக்கொள்கின்றது.

2021 நிறைவடையும்போது நாட்டின் மொத்த கடன் தொகை 18 ட்ரில்லியனா கின்றது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தபோது இந்த அரசாங்கம் கடனை உயர்த்தியுள்ளதாக குற்றம் சாட்டி, அதனை அடைப்பதற்கு மேலும் கடன் பெற்றது. தற்போது இந்த அரசாங்கமும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை குற்றம் சாட்டி மேலும் கடன் பெற்றுள்ளது.

அதனால் அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் கடன் பெறுவதும் பணத்தை அச்சிடுவதும் மாத்திரே பிரே ரிக்கப்பட்டிருக்கின்றது.

வருமானத்தை ஈட்டிக்கொள்ள எந்த பிரேரணையும் இல்லை. அதனால் தான் இந்த அரசாங்கம் தோல்வி எனத் தெரிவிக்கின்றோம். கடன் பெறுவதும் பணம் அச்சிடுவதும் அரசாங்கம் ஒன் றின் இயலாமையின்போதாகும். இந்த அரசாங்கத்தின் இயலாமை ஒருவரு டத்திலே தெரியவந்திருக்கின்றது.

அத்துடன் கடந்த அரசாங்கம் அரச சொத்துக்களை விற்றதாக குற்றம் சாட் டியும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவற்றை மீண்டும் மீட்டெடுப்பதாகவும் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், முத லாவது அமைச்சரவையிலேயே சங்கி ரில்லாவுக்கு பக்கத்தில் இருக்கும் மூன் றரை ஏக்கர் காணியை சிங்கப்பூர் கம் பனி ஒன்றுக்கு விற்றுள்ளது.

அதனால் கடந்த அரசாங்கம் போன்றே இவர்களும் நாட்டின் சொத்துக்களை விற்றும் கடன் பெற்றும் பணம் அச் சிட்டுமே நாட்டை கொண்டுசெல்ல முயற் சிக்கின்றாகளே தவிர, நாட்டுக்கு வருமா னத்தை ஈட்டக்கூடிய எந்த வேலைத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. - என்றார்.

## யாசகம் பெறுவதற்கு இலங்கையில் தடை!

### மீறினால் தண்டனை



கொழும்பிலும் அதனை அண்மித்தப் பகுதிகளிலும் யாசகர்களைப் போல ஆள் மாறாட்டம் செய்யும் நபர்களை கைது செய்ய விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நபர்களை அடையாளம் கண்டு கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ள தாக பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அதேநேரம் சமிக்ஞைகள் மற்றும் சந்தி களில் வாகன ஓட்டுநர்கள், பயணிகள் யாசகம் பெறுபவர்களுக்கு எதையும் வழங்கக்கூடாது எனவும் விற்பனையாளர்களிடமிருந்து எதையும் வாங்கக்கூடாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஓட்டுநர்கள் மற்றும் பயணிகள் அவ்வாறு ஈடுபடுகின்றமை அடையாளம் காணப்பட் டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற வழக்குள் தொடுக்கப்படுவதுடன், கடுமையான நடவடிக் கைகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் கூறினார்.

## ‘சகல குடும்பத்தினருக்கும் தங்களுக்கானதொரு இல்லம்’ வீடமைப்புத் திட்டத்துக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்!







கொழும்பு, நவ. 21

மரதகஹமுல ‘சியபத நிவாச’ வீட மைப்பு திட்டத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவினால் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது.

சகல குடும்பத்தினருக்கும் தங்களுக் கானதொரு இல்லம் என்ற எண்ணக்கரு விற்கு அமைய செயற்படுத்தப்படும் இந்த வீடமைப்பு திட்டத்தின் கீழ் அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் 100 வீடுகளை கொண்ட தொடர் மாடிக் குடியிருப்புகள் நிர்மாணிக்கப்படும்.

அதற்கமைய 160 தேர்தல் தொகுதி களை உள்ளடக்கும் வகையில் 16 ஆயிரம் வீடுகள் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக் கப்படவுள்ளன.

இந்த வீடமைப்புத் திட்டம் திவுலபிட் டிய தேர்தல் தொகுதியில் மரதகஹமுல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுவதுடன், இந்த குடியிருப்பு ஐந்து மாடிகளை கொண் டதாகும். நகர அபிவிருத்தி மற்றும் வீட மைப்பு அமைச்சு, கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை, கட்டட பொருள் தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத் துகிறன.

வீடற்ற பெற்றோருக்கு வீடொன்றை பெற்றுக் கொடுக்கும் ‘மிஹிந்து நிவாச’ திட்ட முன்மொழிவிற்கு அமைவான திட்ட முன்மொழிவு மஹா சங்கத்தினரால் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

அதற்கமைய தேசிய லொத்தர் சபை யால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு 75 கோடி ரூபாக்கு அதிகமான தொகையை வெற் றியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

லொத்தர் வரலாற்றில் 24 கோடி ரூபா என்ற பாரிய தொகையை பெற்ற வெற்றி யாளருக்கான பரிசுத் தொகை இதன்போது பிரதமரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை, கட்டட பொருள் தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




கந்தசஷ்டியின் இறுதித் தினமான நேற்று திருநெல்வேலி நீலாதாட்சி சமேத காயாரோகன பரமேஸ்வர தேவஸ்தான சூரன் போர் காட்சிகள்.

(படங்கள் ந.லோகதயாளன்)

# சிறுவர் உரிமைகள் ...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசுகள் சமவாயத்தின் ஏற்பின் பின்பு உள்ளூர் சட்டதிட்டங்களினை சமவாயத்திற்கு நிகராக அன்றேல் சமவாய உறுப்புரைகளுக்கும் மேலே சென்று சிறுவர் சட்டங்களினை உருவாக்கம் செய்தல் வேண்டும். மறுதலையாகவோ, முரணாகவோ இல்லை.

ஏற்புடமை செய்த உறுப்புரைகளினை கொள்கைகளுக்கு முரணான வகையில் பொருள்கோடல் செய்தல் ஆகாது.

கொள்கைகளுக்குள் முரண்நிலை வருகின்ற பொழுதுகளில், இன்றியமையாத்தேவை ஏற்படின் மட்டும் உயிர்வாழ்தல் மற்றும் சிறந்த நலங்கள் முதன்மைப் படுத்தப்படலாம்.

அரசுகளினால் ஏற்படுத்தப்பட்டதான மட்டுப்பாடுகள் ஒரு தற்காலிகமான ஏற்பாடே தவிர அரசுகளின் நிரந்தரமான நிலைப்பாடுகள் அன்று. எனவே, பிணிக்கும் கடப்பாடுகள் குறித்தே அரசுகள் கவனம் செலுத்த வேண்டுமேயன்றி மட்டுப்பாடுகள் மீதன்று. - என்பதாக, ஐந்து மிக முக்கிய தீர்மானங்களினை வெளியிட்டிருந்தன. இவை, சிறுவர் உரிமைகள் சம்பந்தமான பொருத்தாணைகளுக்கு மட்டுமன்றி அனைத்து உடன்படிக்கைகளுக்கும் ஏதுவானதாக அமைந்து காணப்படுவது சிறப்பானது.

இவ்வாறாக மாறி வரும் உலகில், அரசுகள் பல்வேறு மட்டங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டுமே தமது அதிகாரத்தினை, தற்றுணிபினை எண்ணிப்பார்க்கவும், அனுபவிக்கவும் அனுமதிக்கப்படுகின்றன. இந்த நிலைமையானது, உள்ளூர் சர்வதிகாரத் தன்மையினை நலிவடைய செய்யும். ஜனநாயக. பண்புகளினை மிளிரச் செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபுறத்தே, உள்ளூர் சிறுவர் உலகளாவியக் கொள்கைகளினால் இணைக்கப்பட்டுள்ளனர், சர்வதேசம் உள்ளூர் இறைமைக்குள் ஆணைக்குள் ஜனநாயகமற்ற முறையில் உட்பிரவேசம் செய்து விட்டது என்கின்ற அரசமைப்புச் சட்டவியலாளர்களின் (அலன் ரொக், ரொபெர்ட்) கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

மேற்படி விடயங்களினை அவதானிக்கையில் முக்கியமான எட்டு விடயப்பரப்புக்கள் மீது உடனடிக்வ்கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது புலனாகின்றது.

✲ உள்ளூர் இறையாண்மை என்கின்ற வரையறையினை பாராளுமன்ற சிறப்புக் குழுவின் புத்துயிராக்கல் மூலம் சாத்தியமாக்கி, சர்வதேச நியதிகளுக்கு அமைவாக சிறுவர் உரிமைகள் குறித்த சிறந்த அவதானிப்பும் சிறுவர் உரிமைகள் குறித்த பத்தாண்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாதீடு.

✲ வளர்ச்சியுறும் புதிய யுகத்தில் ஏற்படும் சிறுவர் உரிமை மீறல்கள் மீதான கூர்ந்த பார்வையும் அவற்றின் மூலமான நிரற்படுத்தப்பட்ட செயற்பாடுகளும், பல்வேறு தரப்புக்களின் பங்கும் செயற்பாடும் குறித்த தெளிவும்.

✲ சிறுவர் சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தரவுப் பெட்டகம்.

✲ இவற்றிற்கு அமைவாக உள்ளூர் வழிகாட்டிக் கோவை களும் நியதிகளும்.

✲ சிறுவர்களுடன் இணைந்து செயற்படும் அலுவலர்கள், சிவில் அமைப்புக்கள் தயார்படுத்தப்படுவது என்பதுவும்.

✲ பொதுமக்களின் விழிப்பு நிலை குறித்து அரசின் அக்கறைகள்.

✲ பாதிப்புறு நிலையில் உள்ள சிறுவர்.

✲ காணாமலாக்கப்பட்ட சிறுவர்.

இவற்றினை செயல்வடிவமாக்கும் பொறுப்பு அரசில் அக்கறை கொண்ட தனியங்கள் ஒவ்வொருவருக்குமானது. இதனையே 1929இல் எக்லான்ரைன் ஜெப் (சிறுவர் உரிமைகளினை வரைவு செய்தவர்) 'நான், நாம் அனைவரும் அனைத்துச் சிறுவர்களுக்குமான பொதுவான உரிமைகளினை யதார்த்தமாக்குவதற்கும், அவ்வுரிமைகள் குறித்தான அனைவரின் ஒப்புதலினைப் பெற்றுக் கொள்வதற்கும் அர்ப்பணிப்புடன் ஒற்றுமையாகச் செயற்படல் வேண்டும் என திடமாக நம்புகின்றேன்' என கூறியிருந்தமையும் நினைவு கூரத்தக்கது. 90 வருடங்களில் விளங்காதனவற்றினை மேலும் காலம் தாழ்த்தாது விளங்கிக்கொள்ளவும் அதன் வழி செயற்படவும் இப்பொழுதே திடசங்கற்பம் கொள்வோம். ஏனெனில், நாளை என்பது சிறுவர்களின் உச்ச நலனுக்கு பாதகமானதாக இருக்கலாம்.

# மஸ்கெலியாவில் மேலும் இருவருக்குக் கொரோனா!

கண்டி, நவ.21

மஸ்கெலியா காட்மோர் புரக் மோர் தோட்டத்தில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த குடும்பங்களைச் சேர்ந்த இரு ஆண்களுக்கே தற்போது கொரோனா தொற்று உறுதி செய்யப்படுள்ளதாக அந்தப் பகுதிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர்களுக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை தொற்றுநோய் வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது தற்போது, அவர்கள் தத்தமது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவைக் காரணம் காட்டி ஊடகங்களுக்கு அரசு கதவடைப்பு

## ரணில் கடும் சீற்றம்



கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி ஊடகங்களுக்கு நாடாளுமன்றக் கதவுகள் அடைக்கப் பட்டமை ஜனநாயகத்தின் எதிர்காலத்துக்குச் சுபயோகமாக அமையாது.

- இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கட்சி உறுப்பினர்கள் நேற்று சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2021ஆம் நிதியாண்டுக்காக ஆளும் கட்சி சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத் தரவுகள் பல தவறானவையாகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகம் மறை எண்ணில் இருக்கின்றது என மத்திய வங்கி தெரிவித்திருந்தது. ஆனால், வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி நிலையில் உள்ளது எனத் தரவுகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு போலித் தரவுகளுடன் செயற்பட்டால் பணவீக்கமே ஏற்படும்.

அதன் பின்னர் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கும். வரிச் சலுகைகள் வழங்கினாலும் கொள்வனவு செய்ய மக்களிடம் பணம் இருக்க வேண்டும்.

மக்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தும் வகையில் ஆளும் கட்சியின் வரவு - செலவுத் திட்டம் அமையவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே, மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

குறைகளை ஆதாரத்துடன் ஒப்புவிக்க ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட வேண்டும். இந்த விடயத்தில் பிரதித் தலைவர் என்ற வகையில் ருவன் விஜேவர்தனவுக்குப் பாரிய பொறுப்புள்ளது.

ஜனநாயகத்தின் முக்கிய தூணாக ஊடகம் உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் நாடாளுமன்றமே ஊடகத்தை ஓரங்கட்டுவது என்பது ஜனநாயகத்தின் எதிர்காலத்துக்குச் சுபயோகமாக அமையாது.

ஊடகங்கள் என்னைப் படுமோசமான முறையில் விமர்சித்தன. ஆனால், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் மும்முரமாகச் செயற்பட்டேன். கொரோனாவைக் காரணம் காட்டி ஊடகங்களுக்கு நாடாளுமன்றக் கதவுகள் அடைக்கப்பட்டமை தவறாகும். தற்போதைய எதிர்க்கட்சி (சஜித் அணி) இதனைப் பேசுவதில்லை - என்றார்.

# தேவைகள் நிறைவேறிய பின்னர் மக்களைக் கைவிட்டுள்ளது அரசு!

## நாடாளுமன்றில் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 21

இந்த ஆட்சியாளர்களின் தேவைகள் நிறைவேறிவிட்டதால், மக்கள் மீதான அக்கறை அவர்களிடத்தில் இல்லாமல் போய்விட்டது.

-இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் காலத்தில் அரசால் மக்கள் முன் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயங்கள் எதனையும் வரவு - செலவுத் திட்டத்தில் காண முடியவில்லை. இதன்படி மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கம் ஆட்சியாளர்களிடம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை, 20ஆவது திருத்தச் சட்டம் ஊடான அதிகாரங்கள் உள்ளிட்ட தமக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் மக்கள் இருந்தாலும் ஒன்றே, இல்லாவிட்டாலும் ஒன்றே என்ற எண்ணத்தில் இந்த அரசின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை, வரவு - செலவுத் திட்டத்தில் கொரோனவைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை. கொரோனா தடுப்பு மருந்தைக் கொள்வனவு செய்வதற்காக உலக நாடுகள் போட்டிப் போட்டுக்கொண்டிருக்கையில், இலங்கை அரசு அதனைக் கொள்வனவு செய்ய முயற்சிக்காது இருப்பது ஏன்?



இந்த நிலைமையில், அரசு கொரோனாவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட முயற்சிக்கின்றது - என்றார்.

# உள்ளூர் மீன் உற்பத்தியை விருத்தி செய்ய நடவடிக்கை!



உள்ளூர் ரின் மீன் உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்த அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பந்துல குணவர்த்தன ஆகியோர், ரின் மீன் களுக்கான சில்லறை விலை 200 ரூபா எனவும் நிர்ணயம் செய்துள்ளனர்.

உள்ளூர் ரின்மீன் உற்பத்தியாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றம் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) வர்த்தக அமைச்சில் நடத்தப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த உள்ளூர் ரின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள், உள்ளூர் சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்கள் தாராளமாகவிற்பனைசெய்யப்படுகின்றமையால் எதிர்காலத்தில் உள்ளூர் உற்பத்திகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் தொடர்பாகவும் அமைச்சர்களுக்கு விளக்கமளித்தனர்.

இதன்போது கருத்துக்களைத் தெரிவித்த அமைச் சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலில் செயற்பட்டு வருகின்ற தற்போதைய அரசாங்கம், சுய பொருளாதாரத்தை விருத்தி செய்வதில் முழுமையாக ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், உள்ளூர் ரின் மீன் உற்பத்திகள் பாதிக்க அனுமதிக்கப்படமாட்டா என்று தெரிவித்தனர்.

எனினும், தற்போதைய அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற ரின் மீன்களை சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங் களின் ஊடாக சில்லறை விலை 200 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு வழங்குமாறு அமைச்சர்கள் விடுத்த கோரிக்கைக்கு ரின் மீன் உற்பத்தியாளர் சங்கம் முழுமையான இணக்கத்தை தெரிவித்தனர்.

இந்நிலையில், உடனடியாக தொலைபேசியில் சதொச நிறுவனத்தின் தலைவருடன் உரையாடிய அமைச்சர் பந்துல குணவர்த்ன, உள்ளூர் ரின் மீன் உற்பத்தியாளர்களின் முழுமையான உற்பத்திகளையும் 198 ரூபா வீதம் கொள்வனவு செய்து 200 ரூபா சில்லறைவிலைக்கு இலங்கை முழுவதும் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் எந்த ரின் மீனாக இருந்தாலும் அதனை 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்ய வேண்டாம் எனவும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கடந்த திங்கட்கிழமை மாளிகாவத்தையில் அமைந் துள்ள கடற்றொழில் அமைச்சில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த உள்ளூர் ரின் மீன் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள், ரின்மீன்கள் இறக்குமதி செய்யப்படுவது உட்பட உள்ளூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தினர்.

இந்த விடயத்தை அன்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தர் பிரஸ்தாபித்த நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய கடற் றொழில் அமைச்சர் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆகியோர் இணைந்து கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அலுவலகங்களில் பொலிஸார் சிவில் உடையில் சோதனை!

நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் உரிய சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை அவதானிப்பதற்காக சிவில் உடையில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது –

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் 24 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பகுதிகளில் உள்ள மக்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைக் கடைப்பிடிக்கின்றார்களா? என்பதைக் கண்டறிவதற்காக பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருமளவானோர் சட்டவிதிகளை கடைப்பிடிக்கின்ற போதிலும், சிலர் மாத்திரம் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படுகின்றனர். அவ்வாறானவர்களைக் கைது செய்வதற்காக தொடர்ந்தும் ட்ரோன் கெமராக்கள் ஊடாக சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய 117 பேர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் கடந்த புதன்கிழமை மாத்திரம் 46 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த குற்றங்களுக்காக இதுவரையில் 358 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரின் உதவியுடன் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுகின்றனவா என்பது தொடர்பில் அவதானம் செலுத்துவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதன்போது பிரதானமாக மூன்று விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது. அதற்கமைய இந்தத் நிறுவனம் அல்லது அலுவலகத்திற்கு முன்னால் கைகளை கழுவுதற்கான வசதிகள் ஏற்பாடு, வருகைத்தரும் நபர்களின் உடல் வெப்ப நிலையை கண்டறிவதற்கான வசதிகள், வருகைத்தரும் நபர்கள் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலுமே விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. இது தொடர்பான சோதனை நடவடிக்கைகளுக்காக சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வசித்து வரும் அனைவரும் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக உரிய சுகாதார சட்டவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும். இந்நிலையில் அத்தியாவசிய தேவையின்றி வெளி பிரதேசங்களுக்கு செல்வதையும் அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பிரித்தானியாவின் பாதுகாப்பான கொரோனா நாடுகள் பட்டியலில் இலங்கையும் அடக்கம்!

பிரித்தானியாவின் பாதுகாப்பான கொரோனா வைரஸ் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் தனிமைப்படுத்தல் விதிக்கு அமைய வேறு நாடுகளில் இருந்து செல்பவர்கள் அங்கு 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும்

எனினும் இலங்கை உட்பட ஐந்து நாடுகளுக்கு பிரித்தானியா விதிவிலக்கு அளித்துள்ளது.

அதற்கமைய இலங்கையிலிருந்து பிரித்தானியாவுக்குச் செல்லும் பயணிகள், பிரித்தானியாவிற்கு சென்றதும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்த வேண்டியதில்லை என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இஸ்ரேல், உருகுவே, நமீபியா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்குச் செல்பவர்கள் அங்கு சென்றதும் 14 நாள்கள் தனிமைப்படுத்தத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜெருசலேம், பொனெய்ர், அமெரிக்க விர்ஜின் தீவுகள், சிண்ட் யூஸ்டேடியஸ் மற்றும் சபா மற்றும் வடக்கு மரியானா தீவுகளிலிருந்து வரும் பயணிகளுக்கும் இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# சேர்.பொன். இராமநாதனின்....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அதனை இந்துக்கற்கைகள் பீடத்தினர் விரைவில் நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆன்மீகத்தை வெறும் பயிற்சிச் சொல்லலங்காரமாகக் கைக்கொள்ளாது வாழ்வியல் தத்துவமாக உணர்ந்து, வாழ்ந்து காட்டியவர் சேர். பொன். இராமநாதன். கிறிஸ்தவ, பௌத்த சமய தத்துவங்கள் உள்ளிட்ட பல்வகைமை அறிவு வாய்க்கப்பெற்ற இவர், பிரசங்கித்த ஆன்ம கலாசாரம் (Soul Culture) எனும் நூலில் இடம்பெறும் 'ஞானத்திறவுகோல்' (Key of Knowledge) எனும் பகுதி 'எல்லாச் சமயங்களுக்கும் தத்துவங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாக அமைந்திருப்பதுடன் சைவ சித்தாந்த ஞானத்தின் அகண்ட வியாபகப் பண்பினைத் தெளிவுறுத்தி நிற்கிறது' என 'கர்மயோகம்' தந்த பரமேஸ்வராக்கல்லூரி ஆசிரியரான மு.ஞானப்பிரகாசம் கூறி நிற்பது சுட்டியுரைக்கத்தக்கது.

சேர். பொன். இராமநாதன் சைவசித்தாந்த வித்தகராக விளங்கினார். அவரிடம் காணப்பட்ட சைவசித்தாந்த புலமையின் காரணமாகவே சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முதல் மாநாட்டுக்கு (1906) இவர் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். சுவாமி விவேகானந்தர் வேதாந்த மெய்யியலை அமெரிக்கா, இலண்டன் போன்ற நாடுகளில் பரப்புரை செய்தது போன்று சேர். பொன் இராமநாதன் சைவசித்தாந்த மெய்யியலை மேலைத்தேச நாடுகளில் பரப்புரை செய்த பெருமைக்குரியவராக விளங்கினார்.

இந்துக்கற்கைள் பீடத்தில் இடம்பெற்றுள்ள சைவ சித்தாந்தத்துறை அவரின் மிகுவிருப்பமான சிந்தனைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது. இலங்கையில் சைவசித்தாந்தம் என்ற பெயரில் ஒருதுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும் அமைந்திருப்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், சேர். பொன். இராமநாதனுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

சேர். பொன். இராமநாதன் பன்மொழிப் பாண்டித்தியம் உடையவராக விளங்கியதை அவரது நூலாக்கப்பணிகள், மொழி பெயர்ப்புப்பணிகள் எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக, தமிழ் இலக்கண வித்தகராகத் திகழ்ந்தமையை அவரின் 'செந்தமிழ் இலக்கணம்' எனும் நூல் புலப்படுத்தி நிற்கின்றது. வடமொழியில் புலமைத்துவமாகத் திகழ்ந்ததை அவரின் பகவத்கீதா தமிழ் மொழிபெயர்ப்பும், விருத்தியுரையும் எனும் நூல் மூலம் அறியலாம்.

இலங்கையில் அமைந்து விளங்கும் திராவிடக் கட்டிடக்கலை மரபில் அமைந்துள்ள கோயில்களுக்கு உதாரணமாக கொழும்பு கொச்சிக்கடையில் கட்டப்பட்ட பொன்னம்பலவானேஸ்வரர் கோயில், யாழ்ப்பாணத்து பரமேஸ்வராக்கல்லூரியில் காணப்படும் இராமநாதேஸ்வரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை என்று பேராசிரியர் கா. இந்திரபாலா குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் கொழும்பில் முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ள ஒரேயொரு கோயில் பொன்னம்பலவானேஸ்வரர் கோயில் ஆகும். இக்கோயில் 1856 இல் அருணாசலம் பொன்னம்பலம் முதலியாரால் கட்டப்பட்டது. பின் இவரின் மைந்தன் சேர். பொன். இராமநாதன் அவர்கள் சிறப்புற கட்டிமுடித்தார். இவர் தமிழகத்தில் முருகனுக்கு அமைத்த கோயிலாக கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் கோயில் விளங்குகின்றது. இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் கோயில் அமைத்த சிறப்புக்குரியவராக சேர். பொன். இராமநாதன் விளங்குகின்றார்.

பரமேஸ்வராக் கல்லூரியின் இயக்குநர் சபையின் மேனாள் தலைவர் பிரபல சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் 1976 இல் சேர். பொன். இராமநாதன் பற்றிக் கூறிய கருத்துக்களையும் இங்கு குறிப்பிடலாம். ஈழ மாதாவின் மாபெரும் புதல்வரான இப்பெரியார் 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்நாட்டினை உன்னத நிலையில் வைத்திட புரிந்த பகீரத பிரயத்தனங்களை இன்றைய தலைமுறை மறந்துவிடலாகாது. சட்டநிரூபண சபைக்கு உள்ளேயும், வெளியேயும் நாட்டுக்காகவும், தமது மதத்துக்காகவும் அவர் நிலை நிறுத்திய சேவைச் சாதனைக்கு ஈடேயில்லை. இன்று வாழ்ந்து கொண்டிருப்போரிலும், வாழ்ந்து மறைந்து போனவரிலும், அவருக்கு இணைவு காண்பது இயலாது. அவர் சிறந்த நியாயவாதியாகவும், ஆற்றல் நிறைந்த சொற்போர் நிபுணராகவும், பண்பட்ட உன்னத நாவலோராகவும், திறமைசால் நிர்வாகியாகவும், இவையாவிலும் மேலாக மிக்குயர்ந்த மெய்யியலாளராகவும், பிரம ஞானியாகவும் விளங்கினார் என்று குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கத்தக்க விடயமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப்பெருவள்ளலாருமான சேர். பொன். இராமநாதனின் தொன்னூறாவது குருபூசைதினவிழா இன்றாகும். பன்முக ஆளுமை கொண்ட சேர். பொன். இராமநாதன் அவர்களின் குருபூசை தினவிழா, சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை மற்றும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களின் நினைவுப் பேருரை என்பவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வருடா வருடம் நிகழ்த்துவது மட்டற்ற மகிழ்வைத் தருகின்றது. இவையாவற்றுக்கும் மேலாக சேர். பொன். இராமநாதன் அவர்களின் திருநாமத்துடனேயே அவைக்காற்றுகைக் கலைகளுக்கான பீடம் அமையவிருப்பதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.





# நல்லூரில் சூரசம்ஹாரம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 21

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய சூரசம்ஹாரம் நேற்று இடம் பெற்று.

நாட்டில் நிலவும் கொரோனா நிலமைகளைக் கருத்தில் கொண்டு ஆலய வளாகத்திற்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படாது சூர சங்காரம் ஆலயத்தின் முன் பிரகாரத்தில் இடம்பெற்றது.





கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1985.12.12 | பிறந்த திகதி - 1983.04.03 |
| நட்சத்திரம் - பூராடம் | மதம் - இந்து V |
| பாவம் - 8 1/2 | நட்சத்திரம் - கேட்டை |
| செவ் - ---- | பாவம் - 20 1/4 |
| கல்வி - பட்டதாரி | செவ் - 12இல் |
| தொழில் - ஜேர்மன் PR | கல்வி - Bsc பட்டதாரி |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண் | தொழில் - ஆசிரியை |
| | எதிர்பார்ப்பு - உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# அக்கரைப்பற்றில் சாரதிக்கு தொற்று

அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு பயணிக்கும் தனியார் பஸ் சேவையில் சாரதியாக கடமையாற்றுகின்ற வறக்காப்பொலயைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது பி.சி.ஆர். சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பறூஸா நக்பர் தெரிவித்தார்.

இதையடுத்து கல்முனை பிராந்திய கசுகாதாரப் பணிப்பாளர் ஜி.சுகுணனின் ஆலோசனையின்படி அவருடன் தொடர்புகளை கொண்டிருந்த ஏனையோரை தேடி அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரிகளின் குழாம் விரைந்துள்ளனர்

ஏற்கனவே தென் பகுதியிலிருந்து மாங்காய் கொள்வனவு செய்ய லொறி சாரதியுடன் வந்தவருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை தெரியவந்ததை அடுத்து அக்கரைப்பற்றில் மாங்காய்களை கொள்வனவு செய்த மூன்று குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றனர்.

அத்துடன் அவருடன் இணைந்து வந்திருந்த தென் பகுதியைச் சேர்ந்த மேலும் 19 பேர் இறக்காமம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் மாதிரிகளும் பெறப்பட்டுள்ளன. இந்த நிலையில் கல்முனைப் பிராந்தியத்தில் வாழும் சகலரும் கொரோனாவுக்கு எதிரான தடுப்பு சுகாதார விதிகளை மிகவும் இறுக்கமாக கைக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம் இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்

### கார்த்திகை 1-30, 2020




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir